# 1981-82ஆம் ஆண்டு
# நிதி நிலை அறிக்கை

**நிதி அமைச்சர்**

மாண்புமிகு

## திரு இரா. நெடுஞ்செழியன்

**அவர்கள் ஆற்றிய உரை**

**திருவள்ளுவர் ஆண்டு 2012-ரௌத்திரி பங்குனித் திங்கள் 8 ஆம் நாள்**

**1981 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21 ஆம் நாள்**

**தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1981-82ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவைமுன் வைத்து 1981ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21ஆம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2012 ரௌத்திரி பங்குனித் திங்கள் 8-அம் நாள் அன்று ஆற்றிய உரை.**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

> *'' பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்*
> *அணி என்ப நாட்டிற்(கு) இவ்வைந்து ''*

*என்பது பொய்யாமொழிப் புலவர் வள்ளுவப் பெருந்தகையாரின் பொன்மொழி. நோயில்லா திருத்தல், செல்வச் செழிப்பு, விளைபொருள் வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு என்று கூறுவார்கள் என்பதுதான், வள்ளுவப் பெருமான் உணர்த்தும் கருத்தாகும். அப்படிப்பட்ட அழகு, தமிழ் நாட்டிற்கு என்றும் தொடர்ந்து நின்று நிலவ வேண்டும் என்ற நோக்கத் தோடு, ஆட்சி புரிந்து வரும் தமிழக அரசின் சார்பாக, 1980—81ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 1981—82ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.*

*__2.__ தமிழக அரசின் நிதிநிலையைத் தெளிவு படுத்துவதற்கு முன், நாட்டின் நிலையைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். அகில இந்திய*

அளவில் ஏற்பட்டுள்ள இன்றியமையாப் பொருள்களின் விலைவாசி உயர்வும், பண வீக்கமும், பயன்படுத்தப்பட வேண்டிய பொருள்களின் பற்றாக் குறையும் தமிழ் நாட்டைப் பெருமளவுக்குப் பாதித்துள்ளன. அதோடு கூட, போதுமான மழையின்மையின் காரணமாகத் தமிழகத்தின் பல குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள கொடிய வறட்சிநிலை, மக்களுக்குப் பல்வேறு வகைகளில் பெரும் அவதிகளைத் தந்திருக்கிறது. மாநில அரசு தனக்குக் கிடைத்துள்ள—கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட—உரிமைகளையும், அதிகாரங்களையும், வாய்ப்புக்களையும், வசதிகளையும், நிதி ஆதாரங்களையும் மட்டுமே வைத்துக் கொண்டு, ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை இயன்ற வரையில் சமாளிக்க வேண்டியிருக்கிறது. பாதிப்பு நிலைமைகளைச் சமாளிக்க வேண்டிய நிலை ஏற்படும் போதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வு அளிக்க நேரிடும் போதும் மாநில அரசிற்குக் கணிசமான அளவிற்குக் கூடுதலான நிதி ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. இன்றைய இந்தியக் கூட்டாட்சி அமைப்பு முறையில், மாநிலங்களின் அதிகாரங்களும் நிதி ஆதாரங்களும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், மாநில அரசுகள் மத்திய அரசின் உதவியைப் பெருமளவிற்கு, அவ்வப்போது எதிர்பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தின் அரசுகள் அவையில் ஒருமுறை பேசும்போது,

> " கடந்த பல ஆண்டுகளாக இந்தியக் கூட்டாட்சி அமைப்பின் நடைமுறைப் போக்கானது, மாநிலங்களின் மனப்பான்மையில் ஒருவிதமான விரக்தி நிலையை உருவாக்கியிருக்கிறது. மாநிலங்கள் வெறும் சுங்கம் பெறும் மாநகராட்சி மன்றங்களைப்போல்

> மிக விரைவாக மாறிவருகின்றனவோ என்று கருதும் நிலை ஏற்பட்டுள்ளது. மாநிலங்கள் நாளுக்குநாள், மேலும் மேலும் விரக்தி அடைந்து கொண்டே போகின்றன. மத்திய அரசானது அரசமைப்புச் சட்டத்தை மறுபார்வையிடவும், மறு ஆய்வுசெய்யவும் வேண்டும் என்பதைத் தான், மாநிலங்கள் இப்பொழுது கோரிக்கை யாகக் கொண்டிருக்கின்றன ''.

என்று தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப் பிட்டார்கள். மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் மாநில அரசுக்கு நேரிடையாக ஏற்படுவதால், அதற்குத் தேவையான அதிகாரங் களையும் அளிக்க, மத்திய அரசு முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை, இந்த வாய்ப்பில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சில நாட்களுக்குமுன் கோதுமையின் கொள்முதல் விலையை மத்திய அரசு குவின்டாலுக்கு 117 ரூபாயிலிருந்து 130 ரூபாயாக உயர்த்தியுள்ளது. நெல் கொள்முதல் விலையையும் தக்கவாறு உயர்த்த வேண்டுமென மத்திய அரசைக் கேட்டுவந்துள்ளோம். மத்திய அரசு இந்த அரசின் வேண்டுகோள்படி, நெல் கொள்முதல் விலையை உயர்த்தும் என்று நம்புகிறோம்.

## வறட்சி நிலைமை

**3.** கடுமையான வறட்சியை இம் மாநிலம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிற இக்கட்டான நிலையை இம் மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வர முதற்கண் விரும்புகிறேன். இது குறித்து ஒரு சில வாரங்களுக்கு முன்னர் இம் மன்ற உறுப்பினர்கள் விரிவாக விவாதித்தனர். அதன்பின், இம் மாநிலத்தின்

பல மாவட்டங்களிலும் வறட்சி நிலையை நேரில் கண்டு நிலைமையைத் தெளிவாக அறிய, முதலமைச்சர் அவர்களும் அமைச்சரவையின் ஏனைய அமைச்சர் களும் நானும் இம் மாநிலம் முழுவதிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டோம். இவ்வாறு சுற்றுப் பயணம் செய்ததன் விளைவாகவும் அதனைத் தொடர்ந்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகவும், வறட்சியை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ள நிர்வாக இயந்திரம் முழு மூச்சுடன் செயல்படும் வகையில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. மக்களின் துயரைப் போக்குவதில் எல்லா முயற்சி களும் மேற்கொள்ளப்படும் ; நிதி நிலையை முட்டுக் கட்டையாகக் கருதாமல், துயர் தணிப்பு நடவடிக்கை களை மேற்கொள்வோம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதியளிக்கிறேன். தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், வேளாண்மைப் பொறியியல் துறை, நில நீர் இயக்ககம் ஆகிய மூன்று அமைப்புகளும் கிணறுகளைத் தோண்டுதல், ஆழப்படுத்தல் ஆகிய பணிகளை மாபெரும் அளவில் மேற்கொண்டு வருகின்றன. சிலவருடங்களுக்கு முன்பு தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலைமை நிலவியதை இந்தத் தருணத்தில் நான் நினைவுகூர விரும்புகிறேன். ஏழை கிராம மக்கள் தங்களது கால்நடைகளையும், உடைமை களையும் விற்றுவிட்டு, மற்ற மாவட்டங்களுக்குக் குடிநீர், உணவு மற்றும் வேலை தேடிக் குடியேற வேண்டிய நிலை அப்போது ஏற்பட்டது. ஆனால், இப்போது அரசு தக்க நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுத்த காரணத்தால் இந்தப் பெருங்கேடு தவிர்க்கப்பட்டுள்ளது. குடிநீர். உணவு மற்றும் வேலை வாய்ப்பு வசதிகள் போன்றவை மக்களுக்குக் கிடைப்பதற்காக நன்கு முறைப்படுத்தப் பட்ட வறட்சி நிவாரணப் பணி தொடர்ந்து நடைமுறைப்

படுத்தப்படுவதால் இந்த மாதிரியான நிலை வரும் மாதங்களிலும் உருவாகாது என்பதில் அரசுக்கு நம்பிக்கை உண்டு. வறட்சி நிலையின் கடுமையைப் பற்றியும் வறட்சி நிலமைகளை நேரில் கண்டறிய அதிகாரிகள் குழு ஒன்றை அனுப்பி வைப்பதன் அவசியம் பற்றியும் மத்திய அரசுக்கு ஏற்கெனவே எழுதியுள்ளோம். மத்திய அரசு தன்னால் இயன்ற அளவு நிதி உதவியை இம் மாநில அரசுக்கு வழங்குமென்று நான் நம்புகிறேன். மக்களை வாட்டி வதைக்கும் வறட்சித் துயரினைக் களையும் பொதுப் பணியில் இவ்வரசின் கைகளை வலுப்படுத்தும் வகையில் இம் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க முன் வருவரென்று உறுதிகொள்கிறேன். வறட்சி நிலை கடுமையாக இருந்த போதிலும், அது நமது கட்டுக்குள்தான் இருந்து வருகிறது. குடி தண்ணீர், உணவு, வாழ்க்கைக்கு வேண்டிய ஏனைய தேவைகள் ஆகியவை மக்களுக்குத் தட்டுப்பாடின்றிக் கிடைக்கும்படிப் பார்த்துக்கொள்வதில் இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என உறுதி கூறுகிறேன்.

## உணவு நிலைமை

**4**. பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, உணவு தானிய உற்பத்தி இம் மாநிலத்தில் இறங்குமுகமாக இருக்கக்கூடும். எனினும், பருவ மழை தவறாது பெய்யுமானால், 65 இலட்சம் டன் அரிசி கிடைக்கும் வகையில் நெல் உற்பத்தியும், 22·80 இலட்சம் டன் சிறு தானியங்கள் உற்பத்தியும், 4·34 இலட்சம் டன் பயறு வகைகள் உற்பத்தியும் ஆக, மொத்த உணவு தானிய உற்பத்தி இலட்சம் 92·14 டன்களாக அடுத்த ஆண்டு அமையும் வகையில் ஏற்றதொரு திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

5. பருவ மழை பொய்த்துப் போனதன் விளைவாக, நெல் விளைச்சல் இயல்பான அளவுக்கும் குறைந்துவிட்டது. இதனால், பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின் மூலம் ஏராளமான மக்கள் அரிசி வாங்கத் தலைப்பட்டுள்ளனர். இதனைச் சமாளிக்க, வணிகர்கள் லெவி அளக்கும் முறையை அரசு செயலுக்குக் கொண்டுவந்தது. இதன்படி, மொத்த விற்பனை வியாபாரிகள் இம் மாநிலம் முழுவதிலும் நெல்லையும் அரிசியையும் கொள்முதல் செய்யும் முதல் முனையில் குறிப்பிட்ட அளவுள்ள தானியங்களை அரசு குறிப்பிடும் விலையில் அரசுக்கு விற்கவேண்டும். வெளிச் சந்தையில் கிடைக்கின்ற அரிசிக்கு உறு துணையாக விளங்கும் வகையில் போதிய அளவு முடையிருப்பு (Buffer Stock) இருக்குமாறு பார்த்துக்கொள்வோம். இம் மாநிலத்துக்கு வெளியிலிருந்தும் அரிசி கொள்முதல் செய்வதற்குத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப நிறுவனம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம் போன்ற உபரி மாநிலங்களிலிருந்து அரிசி அல்லது நெல் கொள்முதல் செய்து எடுத்துவர, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்தியத் தொகுப்பு ஏற்பாட்டிலிருந்து அதிக அளவு அரிசியை இம் மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறும், ஒதுக்கீடு செய்த அளவினை இம் மாநிலத்திற்கு விரைந்து கொண்டுவர ஏற்பாடு செய்யுமாறும், மத்திய அரசை வேண்டியுள்ளோம். திங்கள் ஒன்றுக்கு இம் மாநிலத்திற்கென 3,000 டன் கோதுமை ஒதுக்குவதற்குப் பதிலாக, 10,000 டன் கோதுமை ஒதுக்குமாறும் கருத்து தெரிவித்துள்ளோம்.

## மாநிலத் திட்டம்

6. இம் மாநிலத்தின் திட்டப் பணிகள் பற்றி ஆராயும்போது, இம் மாநிலத்தின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 3,150 கோடி அளவுக்கு

இருக்கவேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். நடப்பாண்டுத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 411 கோடி என்ற அளவிற்கே இருக்க, அடுத்த நிதி ஆண்டில் ரூ. 514 கோடி மதிப்பீட்டுச் செலவிலான திட்டத்துக்கு மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால், வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளைப் பெருக்க வேண்டும்; அப்போதுதான், மேலும் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ள முடியும் என்பதே இவ்வரசின் கருத்து. எனவே, அடுத்த ஆண்டில் நிறைவேற்றுவதற்கென ரூ. 563·26 கோடி அளவிலான திட்டத்தைத் தீட்டியுள்ளோம். இந்த அளவுள்ள திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால், நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு இம் மாநில அரசு மேலும் முனைப்பான முயற்சிகளை மேற்கொள்ளத்தான் வேண்டும். இது பற்றி விரிவாகப் பின்னர் கூறுவேன்.

## வேளாண்மை

**7**. கிராமப் பகுதியில் வேளாண்மை விரிவாக்கப் பணியை மேற்கொள்வதில் சிறப்பு நாட்டம் செலுத்த வேண்டுமென இவ்வரசு கருதுகிறது. இதனை எய்தும் பொருட்டு, வேளாண்மை விரிவாக்கப் பணியைச் சீரமைத்து வலுப்படுத்தப் புதிய திட்டமொன்றை வகுத்துள்ளோம். விரைவில் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, உலக வங்கி அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம். இம் மாநில நிலைமைகளுக்கு ஏற்ற, சிறந்த, நவீனப் பண்ணை முறைகளை இத் திட்டத்தின் மூலம் உழவர்கள் பெறலாம். இரண்டாண்டுக் கால அளவில் இத் திட்டம் இம் மாநிலத்தில் செயலுக்கு வருமென எதிர் பார்க்கிறோம்.

**8.** இப்போது இம் மாநிலத்தில் ஆண்டுதோறும் 103 கோடி தேங்காய் உற்பத்தியாகிறது. இதனை 5 ஆண்டுக் கால அளவில் ஆண்டுதோறும் 153 கோடி காய்களாக உயர்த்துவதற்கு இவ்வரசு திட்டமொன்றைச் செயல்படுத்தி வருகிறது. இந் நோக்கத்தை எய்து வதற்காக, இம் மாநிலத்திலுள்ள தென்னம்பிள்ளை வளர்ப்புப் பண்ணைகளில் சிறந்த வகை தென்னங்கன்று களை உற்பத்தி செய்ய அவற்றின் நடவடிக்கைகள் கணிசமான அளவுக்குப் பெருகியுள்ளன. உள்நாட்டி லேயே பாமாலின் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கு வதற்காக ஒருவகை பனை வளர்ப்பை ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றையும் அரசு தீட்டி வருகிறது. இச் சிறப்பு வகை பனை வளர்வதற்கேற்ற தட்பவெப்ப நிலை யுள்ளதெனத் தெரிந்தெடுத்த சில மாவட்டங்களில் இத் திட்டம் நிறைவேற்றப்படும். இத் திட்டமும் சமையல் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஏனைய திட்டங்களும் சமையல் எண்ணெய் கிடைப்பதில் இம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள ஓரளவு தட்டுப்பாட்டினை ஒரு சில ஆண்டுகளில் போக்கிவிடும். செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் வேர்க்கடலை உற்பத்தியைப் பத்தாண்டுகளில் பெரிதும் பெருக்க இவ்வரசு கருதியுள்ளது. இக் குறிக்கோளைக் கருத்திற்கொண்டு, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் நிறுவப் பட்டுள்ளது. இந்த இணையம் தனது உறுப்பினர் களாயுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் துணைகொண்டு, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை உழவர்கள் உயர்த்தவும், உற்பத்தியான பொருள்களுக்கு நல்ல விலை பெறவும் உழவர்களுக்கு உதவி செய்யும்.

**9.** சிறு உழவர் மேம்பாட்டு நிறுவன அமைப்புத் திட்டம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்துடன் 1980 அக்டோபர் முதல் இணைக்கப்பட்டுள்ளது. அடுத்த

ஆண்டில் வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் 20·64 கோடி ரூபாய் செலவில் இத் திட்டம் நிறைவேற்றப் படும். இதற்காகும் செலவை, மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.

## கூட்டுறவு

**10.** கூட்டுறவு இயக்கம் தமிழ் நாட்டில் நன்கு வேரூன்றியுள்ளது. இத் துறைக்கு அரசு அளித்து வரும் உதவி அனைவரும் அறிந்த ஒன்றாகும். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க அடுத்த ஆண்டில் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படும். ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு இலட்சம் வேளாண்மைக் குடும்பங்கள் கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வரப்படும். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர், வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்க உறுப் பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவார். இத்தகைய சங்கங்கள் அளிக்கும் கடன் உதவியையும் பிற பணி களையும் பயன்படுத்திக் கொண்டு, இச் சமூகத்தினர் தங்கள் வருமானத்தைப் பெருக்க இந்தத் திட்டம் வகை செய்யும். 1981–82ஆம் ஆண்டில் 40,000 பேர் உறுப் பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். உறுப்பினர் களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொருவருக்கும் 100 ரூபாய் உதவித் தொகை அளிக்கக் கருதியுள்ளது. பயிர்க் கடன் பெறவும், பாற்பண்ணை நடத்துதல், கோழி வளர்த்தல், செம்மறியாடு வளர்த்தல் முதலிய வற்றுக்கு நடுத்தர காலக் கடன் பெறவும் அச் சங்கத் துக்கு அவர் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்தை முன்னிட்டே இந்த உதவித்தொகை அவருக்கு அளிக்கப் படும்.

**11.** 1981–82ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கிற மற்றொரு திட்டம், இம் மாநிலத்தின் முக்கிய நகரங் களில் மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா

ஓட்டுநர் சங்கங்களை அமைப்பதாகும். மோட்டார் பொருத்தப்பட்ட 1,000 சைக்கிள் ரிக்ஷாக்களை வாங்குவதற்கு 1,000 உறுப்பினர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும். மாநில அரசு அளிக்கும் நிதி உதவி, மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா விலையில் கால் பங்குக்கு 1,125 ரூபாய் உதவித்தொகை வடிவில் இருக்கும். விலையில் எஞ்சிய பகுதியை உறுப்பினர்கள் கடன் வாங்குவது மூலம் பெற வேண்டும்.

## கால்நடை வளர்ப்பு

**12.** 1981–82-ல், 29.60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் கால்நடை தீவிர வளர்ச்சித் திட்டம் தொடங்கப்படும். கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும், பால் உற்பத்தியைப் பெருக்கவும் ஒவ்வொரு திட்டத்தின்கீழும், ஒரு இலட்சம் கால்நடைகள் கொண்டுவரப்படும். தக்க நிலங்கள் மிகப் பரந்த பரப்பளவில் அமைந்துள்ள, அரசு நடத்தி வரும் 9 கால்நடைப் பண்ணைகளை இலாபகரமாக்கப் பாசன வசதி மேம்படுத்தப்படும். அடுத்த ஆண்டில், கூடுதல் நீர் ஆதாரங்களை ஏற்படுத்தியும், உழவுக் கருவிகள் முதலியவற்றை வாங்கியும் கால்நடைப் பண்ணைகள் நான்கினை 19.08 இலட்சம் ரூபாய் செலவில் அரசு வலுப்படுத்தக் கருதியுள்ளது. கால்நடை மருந்தகங்கள் 20 தொடங்குதல், 4 மருந்தகங்களை மருத்துவமனைகளாகத் தரமுயர்த்தல், மூன்று மருத்துவமனைகளை மேம்பட்ட நிலையங்களாகத் தரமுயர்த்தல் போன்ற திட்டங்கள் அடுத்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். கோழி வளர்ப்பில் மிகுந்த அக்கறை

காட்டப்படும் பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோட்டில் கோழி நோய்க் குறியியல் ஆய்வுக்கூடம் தொடங்கப்படும். இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து உற்பத்தி நிறுவனத்தைச் சேர்ந்த கோமாரி திசு வளர்ப்பு—அம்மைப் பால் உற்பத்திப் பிரிவான்து, கோமாரி நோயை அடியோடு ஒழித்துக் கட்டு வதற்கென்று கோமாரி திசு வளர்ப்பு அம்மைப் பாலைப் போதிய அளவுக்கு உற்பத்தி செய்யும் வகையில் வலுப் படுத்தப்படும். தமிழ்நாட்டில் கோழி வளர்ப்புக்காக ரூ. 31.53 கோடி செலவில் ஒரு திட்டத்தை அரசு தயாரித்துள்ளது. உலக வங்கியிடமிருந்து நிதி உதவி பெற்றுத்தர இத் திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### பாசனம்

**13.** ஆறாவது திட்டக் காலத்தில், பெரும் பாசனத் திட்டங்களுக்கும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கும் என 150 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது, சிறு பாசனத் திட்டங்களுக்காக 18 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பாசனத்துக்கென அடுத்த ஆண்டில் 26·62 கோடி ரூபாய் செலவிடக் கருதியுள்ளோம். 20,500 ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி ஏற்படுத்தப்படும். இதன் மூலம், பாசனப் புன்செய் பயிர்கள் 20,500 டன் விளையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**14.** பாசனத்துக்குப் பயன்படுத்தப்படாத ஆற்று நீர்வளம் மிகக் குறைவேயாகும். எனவே, தற்போதுள்ள பாசன ஏற்பாடுகளை நவீனப்படுத்துவதற்கு ஆறாவது திட்டத்தில் முன்னுரிமை அளித்துள்ளோம். பாசன நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதும் அதன் மூலம் சேமித்த நீரைக் கொண்டு

பாசன வசதியைப் பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். பாசனத்துக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் 55 சதவீதத் தொகை, பாசன ஏற்பாட்டினை நவீனப்படுத்துவதற்கென்றே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பெரியாறு, வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டம் இவ்வாறு மேற்கொள்ளப்படுகிற பெருந்திட்டங்களில் ஒன்றாகும். தற்போதைய கால்வாய் ஏற்பாட்டில் இத்திட்டத்தின் காரணமாக, இழக்காமல் மீதமாகிற தண்ணீர், புதிதாக 25,455 ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி அளிக்க உறுதுணையாக இருக்கும்.

### மீனளமும் மீனவர் நலனும்

**15.** உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. முதல் கட்டப் பணியாக, ஆண்டுதோறும் 10 கோடி மீன் குஞ்சுகள் நீர் நிலைகளில் வளர்க்கப்படும்; முதல் கட்டப் பணி 1983–84ஆம் ஆண்டுக்குள் நிறைவெய்தும். அதன்பின், மேலும் இரு கட்டங்களில் இப்பணி தொடர்ந்து நடைபெறும். இதன் விளைவாக, மீன் குஞ்சு உற்பத்தி ஆண்டுக்கு 30 கோடியாக உயரும். மேலும், நீர்த்தேக்கங்களிலும் பாசன ஏரி குளங்களிலும் சிறந்த வகை மீன் குஞ்சுகள் விட்டு வளர்க்கப்படும். இறால் வளர்ப்பில் கிராம இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயிற்சி நிலையங்களில், ஓராண்டில் சுமார் 1,000 இளைஞர்கள் பயிற்சி பெறுவர். அதே நேரத்தில், ஆழ்கடல் மீன் பிடிப்பு நடவடிக்கைகளும் முழுமுரமாக நடைபெறும். 1981–82ஆம் ஆண்டில் சிறந்த வகை ஆழ்கடல் மீன்பிடி கலங்கள் நான்கு வாங்கப்படும். வெட்ஜ்

பார், பெட்ரோ பார், மன்னார் வளைகுடா, பாக் விரிகுடாப் பகுதிகளில் கிடைக்கிற மீன்களைப் பிடிக்க இக்கலங்கள் பயன்படுத்தப்படும். மேலும், தமிழ் நாட்டின் தென் மேற்கு, தென் கிழக்குக் கடற்பகுதி களில் கிடைக்கும் மீன்வளத்தைப் பயன்படுத்திக் கொள்ள, தமிழ்நாடு மீனள மேம்பாட்டு நிறுவனம் பர்ஸ் ஸீனர் (Purse Seiner) 45 அடி நீளமுள்ள கலங்கள் ஐந்தினை வாங்கும். சென்னை நகரிலும் ஏனைய முக்கிய நகரங்களாகிய கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப் பள்ளி ஆகியவற்றிலும் மேலும் பல சில்லறை விற்பனைக் கடைகளைத் தொடங்கி, இந்த நிறுவனம் மீன் விற்பனை நடவடிக்கைகளைப் பரவலாகவும் முனைப்பாகவும் மேற்கொள்ளும்.

**16.** பிடித்த மீனைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கும் வசதிகளும் மீன்பிடி துறைமுக வசதிகளும் அடுத்த நிதி ஆண்டில் மேம்படுத்தப்படும். சென்னை மாநகரில் மீன்பிடி பெருந்துறைமுகம் ஒன்று அமைக் கப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டில் சின்ன முட்டத்தில் மீன்பிடி துறைமுகம் கட்டப்படும்; வாலிநோக்கத்தில் சிறிய அளவில் தோணித் துறை ஒன்றும் அமைக்கப்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையாறையில் அத்தகைய வசதி களை உருவாக்கப் புலனாய்வு நடந்து முடிந்துள்ளது. இத்தகைய வசதிகளை தொண்டி கிராமத்தில் ஏற்படுத்தவும் புலனாய்வுப் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. மீனவர் வருவாயைப் பெருக்கவும் இவ்வரசு, உணவு-வேளாண்மை நிறுவனத்தின் (F.A.O.) ஒத்துழைப்புடன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சிறு மீனவர்கள் கடல் மீன் பிடிப்பை மேற்கொள்வதற்கு மிக வாய்ப்பான சிறு கலத்தை நிர்ணயித்தறியும் பொருட்டு, சிறு மீன்படகுகள்,

சிறந்த வகை நாட்டுப் படகுகள், கட்டுமரம் போன்ற படகுகள் ஆகியவற்றைக் கொண்டு முன்னோடி மீன் பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இரு மீன்பிடி கலங்கள் இணைந்து பணியாற்றுவதன் வெற்றி வாய்ப்புகளை மதிப்பிடுவதற்காக, மண்டபத்திலும் தூத்துக்குடியிலும் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

## காடு வளர்ப்பு

**17**. காடுகளைப் பரவலாக அழிப்பதால், பொதுவாகப் பருவ மழை பொய்த்துப் போகிறது என்பது அனைவருக்கும் தெரியும். வீட்டுப் பயனுக்காகவும் ஏனைய தொழிற் பயனுக்காகவும் மரங்களை வெட்டுவது அவசியமென்றாலும், முனைப்பாகக் காடு வளர்ப்பு மேற்கொள்ளப்படுவதும் அவசியமாகும். சமூகக் காடு வளர்ப்புக்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் 45 கோடி ரூபாய் செலவு ஏற்படும் சிறப்புத் திட்டம் ஒன்றை வகுப்பதற்காக, ஸ்வீடன் நாட்டு சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம்.

## மின் உற்பத்தி

**18**. இம்மாநிலத்தில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாநில அரசு தலையாய முன்னுரிமை அளித்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான 3,150 கோடி ரூபாயில், மின் உற்பத்திக்கு மட்டும் ஏறக்குறைய 1,023 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டு மின் இணைப்பு ஏற்பாட்டின் உற்பத்தித் திறனளவு இத்திட்ட கால அளவின் தொடக்கத்தில் 2,719 மெகாவாட்டாக இருந்தது. இது இத்திட்ட கால இறுதிக்குள் 4,769 மெகாவாட்டாக உயர்த்தப்படும். தூத்துக்குடி

அனல் மின் நிலையத்தில் இரண்டாவது இயந்திரம் இந்த ஆண்டு சனவரித் திங்களில் செயல்படத் தொடங்கியது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது இயந்திரமும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் 235 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இயந்திரமும் செயல்படத் தொடங்கி, தமிழ்நாட்டு மின் உற்பத்தித் திறனளவு 1981–82ஆம் ஆண்டில் 3,374 மெகாவாட்டாக உயரும். மேட்டூர் அனல் மின் நிலையத்தையும் கீழ் மேட்டூர் புனல் மின் நிலையத்தையும் நிறுவும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இவற்றின் பயன்கள் ஆறாவது திட்டக் கால அளவின் கடைசி இரு ஆண்டுகளில் தமிழ் நாட்டிற்குக் கிடைக்கும். பேசின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையத்தில் இப்போதுள்ள இயந்திரங்களுக்குப் பதிலாக, 110 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் புதிய இயந்திரம் வாங்குவதற்கான திட்ட அறிக்கை ஒப்புதல் பெற வேண்டி இப்போது மத்திய அரசிடம் உள்ளது. 630 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுள்ள அனல் மின் நிலையத்தை வட சென்னையில் நிறுவத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்த ஆண்டில் 30,000 பாசனக் கிணறு களுக்கு மின் இணைப்பு கொடுப்பதென இலக்கிட்டிருக்க, 1981 பிப்ரவரி வரை 29,742 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 916,969 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பதால், இத்துறையில் தமிழ்நாடுதான் இந்தியாவில் முதலிடம் வகிக்கும் சிறப்பு பெற்றுள்ளது. இம்முயற்சிகள் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டு, 1981–82ஆம் ஆண்டில் மேலும் 30,000 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படும். குடிசைகளுக்கு மின்னொளி வழங்கும் திட்டத்தைத் தொடங்கியதிலிருந்து ஒன்றரை ஆண்டு களுக்குள் 2.7 இலட்சம் குடிசைகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டுள்ளது.

**19.** பருவ மழை பொய்த்து, நீர்த் தேக்கங்களில் குறைந்த அளவில் நீர் இருப்பதால், மின் வெட்டு விதிக்க வேண்டிய அவசியத்துக்குத் தமிழ்நாடு அரசு ஆளாக நேரிட்டுவிட்டது. ஆனால், தூத்துக்குடியிலும் எண்ணூரிலும் மின் உற்பத்தி உயர்ந்து வருவதாலும் கேரளத்திலிருந்தும் நெய்வேலியிலிருந்தும் மின்சாரம் கிடைத்து வருவதாலும், நிலைமை சீராகுமென நம்புகிறோம்.

**20.** கடந்த மூன்றாண்டுகளில், நிலக்கரியின் விலை டன்னுக்கு 82 ரூபாயாக இருந்தது 114 ரூபாயாக உயர்ந்து விட்டது. அவ்வாறே, நிலக்கரியைக் கப்பலில் எடுத்து வரும் செலவும் இரயில் மூலம் எடுத்து வரும் செலவும் கணிசமான அளவு உயர்ந்து விட்டன. கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்குவதற்கான செலவு உயர்வும் இத்துடன் சேர்ந்து உள்ளது. மேலும், நெய்வேலி நிறுவனத்திடமிருந்து வாங்கும் மின்சாரத்துக்கு அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது. தற்போது மின்சார வாரியத்திற்கு கிடைத்து வரும் வருவாய் நடைமுறைச் செலவுக்குக் கூட போதுமானதாக இல்லை. பராமரிப்புச் செலவு, வெளி நிறுவனங்களிடமிருந்து பெற்றுள்ள கடன்களின் உரிய தவணைத் தொகை, வட்டி ஆகிய செலவுக்கு அரசு நிதி உதவி அளிக்க வேண்டிய நிலையில் வாரியம் இருக்கிறது. அரசிடம் இருந்து கிடைக்கும் உதவியாக 100 கோடி ரூபாயைக் கணக்கில் கொண்ட பிறகும் மின்சார வாரியத்தின் ஆண்டுத் திட்ட செலவான ரூபாய் 169·59 கோடிக்கு, ரூபாய் 89·31 கோடி அளவில் பற்றாக்குறை இருக்கும். மின் கட்டண அமைப்பைத் திருத்த வேண்டியதன் அவசியத்தைத் திட்டக்குழு வலியுறுத்தியுள்ளது. மின் வாரியம் சீராகச் செயல்பட வேண்டுமானால், இவ்வாறு திருத்துவது

இன்றியமையாததாகுமெனத் திட்டக்குழு கருத்து தெரிவித்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியம் விதித்து வாங்கும் மின் கட்டணம் இந்தியாவில் பல மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது குறைவாக உள்ளதென்றும், இவ்வாறு கட்டண வீதத்தைக் குறைவாக வைத்திருப்பது சரியல்லவென்றும், திட்டக் குழு கூறியுள்ளது.

## தொழில் வளர்ச்சி

**21**. தொழில் துறையில், தமிழ் நாட்டின் சாதனை சிறப்பாக அமைந்துள்ளது. தமிழ் நாட்டில் புதிய தொழிற்சாலை தொடங்க முன்வருபவர்களுக்கு மேலும் பல வசதிகளும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டுமெனப் பலரும் கூறுகிறார்கள். இதனை ஆராய்ந்துவரும் அரசு, விரைவிலேயே ஏற்றதொரு முடிவு எடுக்கும். இதற்கிடையில், அரசுத் துறை தொழில் நிறுவனங்கள் தங்கள் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. மதுரை மாவட்டத்தில் அரசுத் துறையில் மூன்றாவது சிமிட்டி ஆலையை நிறுவுவதற்கு இசைவுக் கடிதம் அனுப்புமாறு கேட்டுள்ளோம். 32 கோடி ரூபாய் செலவு பிடிக்கும் இத்திட்டம் ஏறக்குறைய 1,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். சுமார் 20 கோடி ரூபாய் செலவில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வெடி மருந்துகள் தயாரிக்கும் திட்டத்தைத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஸ்வீடன் நாட்டு ஒத்துழைப்புடன் மேற்கொண்டு வருகிறது. கூட்டுறவுத் துறையிலுள்ள நூற்பாலைகள் இந்த ஆண்டில் நல்ல ஆதாயத்துடன் செயல்பட்டுள்ளன. சில ஆலைகள் தங்களது உற்பத்தித் திறனை உயர்த்து மளவுக்குச் சொந்த உபரி நிதி ஆதாரங்களைத் திரட்ட முடிந்துள்ளது. வட ஆர்க்காட்டிலும் சேலத்திலுமுள்ள

ஆலைகள் தங்களிடமுள்ள கதிர்களின் எண்ணிக்கையை 12,000-லிருந்து 25,000ஆக உயர்த்தும். பேட்டையிலுள்ள நூற்பாலை 12,000 கதிர்கள் கொண்ட கிளை ஆலை ஒன்றை எட்டையபுரத்தில் தொடங்கக் கருதியுள்ளது. மேலும், நெசவாளர்களின் பெருகிவரும் நூல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, கூட்டுறவுத் துறையில் மேற்கொண்டு 3 நூற்பாலைகளை அரசு தொடங்கும். நாளொன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியும் திறனுடன் கூடிய சர்க்கரை ஆலை ஒன்றை 1981-82இல் தொடங்குவதற்காக, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1.70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**22.** அரசுத் துறை நிறுவனமான தமிழ்நாடு கனிப் பொருள் நிறுவனம் உயர்ந்த அளவு கனிப்பொருள் விற்று நல்ல முறையில் செயல்பட்டுள்ளது. கனிப் பொருள் ஏற்றுமதியை ஊக்குவிப்பதில் இந்த நிறுவனம் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. இதன் வருமானத்தில் 90 சத விதம் அந்நியச் செலாவணியாகக் கிடைக்கிறது. இதுவரை சேர்ந்து வந்துள்ள இழப்பினை இந்த நிறுவனம் இப்போது பெற்று வரும் ஆதாயம் ஈடு செய்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**23.** மற்றொரு அரசுத் துறை நிறுவனமாகிய தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம், தான் செயல்படத் தொடங்கிய முதலாண்டிலேயே ஆதாயம் ஈட்டியுள்ளது. இந்நிறுவனத்தின் சாதனையை மேலும் மேம்படுத்துவதற்காக, 3 கோடி ரூபாய் செலவில் கனிப் பொருள் செறிவுபடுத்தும்—வெப்பந்தாங்கிக் கல் தயாரிப்புச் சாலை நிறுவப்படும்.

## சிறுதொழில் வளர்ச்சி

**24**. சிறுதொழில்கள் வளர்ச்சிக்கும் அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாக, சிறுதொழிற் பிரிவுகள், சிறந்த நிதி வசதிகளைப் பெற்று வருகின்றன. நடப்பாண்டில் இக் கழகம் 32 கோடி ரூபாய் வரை கடன் உதவி அளித்து தனது பணியை இரு மடங்காக உயர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் இதன் கடன் நடவடிக்கைகள் 45 கோடி ரூபாய்வரை விரிவாக்கப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது, அரசின் மற்றொரு நிறுவனமாகிய தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (SIDCO) மூலமாக, சிறு தொழில்கள் வளர்ச்சியை அரசு பெருக்கி வருகிறது. இக் கழகம் பிறவகை உதவிகளுடன் கூட, பணிக் கொட்டகைகள், சிறு கொட்டகைகள் கட்டுதல் போன்றவற்றிற்கும் உதவி அளிக்கிறது. இரும்பு, எஃகு, பாரபின் மெழுகு, நிலக்கரி, கல்கரி ஆகியவற்றைச் சிறுதொழிற்கூடங்களிடையே பகிர்ந்தளிப்பதற்காக இக்கழகம் கொள்முதல் செய்கிறது. நடப்பாண்டில் இக்கழகத்தின் இந்த நடவடிக்கைகளில் வியாபாரத் தொகை 12 கோடி ரூபாயிலிருந்து 17 கோடி ரூபாயாக உயரும். அடுத்த ஆண்டில் இது 25 கோடி ரூபாய் வரையில் உயர்த்தப்படும். நலிந்த சிறுதொழில் பிரிவு களுக்கு வேண்டிய நிதி உதவி அளித்து அவற்றைத் திறம்பட இயங்கச் செய்வதிலும் இக்கழகம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

## கைத்தறி

**25**. கைத்தறி நெசவாளர்கள் நலனில் இவ்வரசு தொடர்ந்து அக்கறை செலுத்தி வருவது யாவரும் அறிந்ததாகும். அண்மையில் நூலின் விலை உயர்ந்த போது, 20ஆம் நம்பர் நூலிலிருந்து 40ஆம் நம்பர்

நூல் வரை நியாயமான விலையில் வழங்க அரசு ஏற்பாடு செய்தது. அரசு கேட்டுக்கொண்டதன்பேரில், தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கம், கைத்தறி நெசவாளர்களுக்குப் பகிர்ந்து அளிக்க 40ஆம் நம்பர் மோட்டா ரக நூலில் 5,000 பொதி கொண்ட சிட்ட நூல், குறைந்த விலையில் கிடைக்கச் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய ஒப்புக்கொண்டுள்ளது. நெசவாளர்களின் வேலை நிலைமைகளை முறைப்படுத்துவதற்கென தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் வேலை நிலைமை-பல்வகை விதித் துறைச் சட்ட வரைவு ஒன்றை விரைவில் கொண்டு வரவும் அரசு கருதியுள்ளது.

**26**. கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் கைத்தறித் துணி விற்பனையை விரிவுபடுத்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த நிறுவனத்தின் வணிகத் தொகை (Turnover) இந்த ஆண்டு ரூபாய் 45 கோடிக்கு இருக்கும் ; 1981--82இல் 50 கோடி ரூபாய் அளவிற்கு இது உயர்த்தப்படும். மத்திய அரசின் உதவியுடன் கோஆப்டெக்ஸ் நிறுவனத்தில் ரூபாய் 100 இலட்சம் கூடுதலாக அரசு வரும் ஆண்டு முதலீடு செய்யும்.

## கிராமத் தொழில்கள்

**27**. கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் மூலமாகக் கிராமப் பகுதியில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அரசு ஊக்கமளித்துவருகிறது. அடுத்த நிதி ஆண்டில் 33,000 பேர்களுக்கு இவ்வாரியம் கூடுதல் வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாரியம் 21.12 இலட்சம் ரூபாய் செலவில் பெரியார் மாவட்டத்தில் குரோம் (செருப்பு) தோல் தொழில் பிரிவை விரிவுபடுத்தவும்

கருதியுள்ளது. வாரியத்தின் நடவடிக்கைகளுக்குப் போதிய நிதி உதவியை அரசு தொடர்ந்து அளித்துவரும். தொழில் முதலீட்டுக் கழகத்தின்மூலம் 27 கோடி ரூபாய் கடன் வழங்குவது, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 25 கோடி ரூபாய் மதிப்புள்ள மூலப் பொருள்களை வழங்குவது, கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கிராமத்தொழில்கள் பிரிவு செய்யும் விற்பனையை 45 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்துவது, 13.19 கோடி ரூபாய் அளவுக்குத் திட்ட நிதி ஒதுக்கீடு செய்வது ஆகியவை வாயிலாக, அடுத்த நிதி ஆண்டில் சிறு தொழில்களையும் கிராமத் தொழில்களையும் அரசு மேலும் வளர்க்கக் கருதி யுள்ளது.

## சாலை வசதி

**28.** 1,500 மக்கள் கொண்ட கிராமங்கள் பயனடையும் வகையில் சாலைகள் அமைத்துச் சீரமைக்கும் பணியை அரசு படிப்படியாகச் செய்து வருகிறது. ஐந்து நிலைகளைக் கொண்ட இத் திட்டத்தின்கீழ் 28·25 கோடி ரூபாய் மூலதனச் செலவில் மொத்தம் 4,819 கிலோமீட்டர் கொண்ட சாலைகள் 2,789 கிராமங்களில் அமைக்கப்படும். நடப்பாண்டில் தன்னிறைவு வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிற்கு இத் தொகை 7 கோடி ரூபாயாக உயர்த்தப்படுகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் இதற் கென மொத்தம் 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பேருந்துகள் செல்கின்ற ஊராட்சிச் சாலைகளின்

பராமரிப்பை அரசு ஏற்கின்ற திட்டம் இவ்வாண்டு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல் படுகிறது. 1981–82ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு 13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## சேதுசமுத்திரத் திட்டம்

**29.** சேதுசமுத்திரம் திட்டத்தைச் செயல்படுத்த அனுமதிக்குமாறு மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தி வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைவு கூரலாம். இத் திட்டத்தை மீண்டும் புதிதாக ஆராய உயர் அதிகாரக் குழு ஒன்றை மத்திய அரசு இப்போது அமைத்துள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

## சாலைப் போக்குவரத்து

**30.** போக்குவரத்து நிறுவனங்களில் இந்த நிதி ஆண்டில் 1981 பிப்ரவரி வரையில் ஏறத்தாழ 1,376 பேருந்துகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 10 இலட்சம் பேர் பயனடைகிற வகையில் 310 கிராமங்களை இணைக்கின்றவாறு பேருந்து வழித்தடங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. போக்குவரத்து நிறுவனங்களின் நிதி நிலைமைகளை, பெட்ரோலியப்பொருள்கள், உருக்கு (Steel) ஆகியவற்றின் விலையில் ஏற்பட்ட கடுமையான உயர்வு வெகுவாகப் பாதித்துள்ளது. 1979–80இல் வரிக்கு முந்தைய ஆதாயமாக 6.67 கோடி ரூபாயை ஈட்டிய இந் நிறுவனங்கள் இப்போது 1980–81இல் ஏறத்தாழ ரூ. 16 கோடி வரை பெருத்த இழப்பை அடையலாம். இது இந் நிறுவனங்களின் திட்டங்களைக் குறைத்து விடவே செய்யும். எரிபொருள்களின் விலை உயர்வால் ஆண்டுத் திட்ட அளவான ரூபாய் 17·50 கோடிக்கு சுமார் 14·46 கோடி பற்றாக்குறை இருக்கும்.

இதனைக் குறைக்கவும் பொதுமக்களுக்குச் சிறந்த, கட்டுபடியாகக் கூடிய பேருந்து வசதி அளிக்கவும் வேண்டுமானால், பேருந்து கட்டணத்தைத் திருத்தி அமைப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இது பற்றி ஆளுநரது உரையிலும் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. பேருந்து கட்டணங்களைத் திருத்தியமைக்க அவசியமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது. அண்டை மாநிலங்களும், தமிழ் நாட்டில் நிலவும் கட்டண வீதங்களை விட அதிகமாக இருக்கும் வகையில் கட்டண வீதங்களைத் திருத்தி யமைத்துள்ளன. பெட்ரோலியப் பொருள்களின் விலையில் அடுத்தடுத்து ஏற்பட்ட இரு உயர்வாலும், போக்குவரத்து சம்பந்தப்பட்ட அனைத்துப் பொருள்களின் பெரும் விலை உயர்வாலும் போக்கு வரத்துக் கட்டணத்தைத் திருத்தியமைப்பது அவசிய மாகியுள்ளது.

## சுற்றுலா வளர்ச்சி

**31.** சுற்றுலா நாளுக்கு நாள் மக்களிடையே பரவலாகிச் சிறப்பு பெற்று வருகிறது. அந்நியச் செலாவணியை நாட்டுக்கு ஈட்டித்தரும் மிக முக்கிய மான தொழில்களில் இதுவும் ஒன்றாகும். சுற்றுலாப் பயணிகளை இம்மாநிலம் கவர்ந்து ஈர்க்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அயராது பாடு பட்டு வருகிறது. மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற அனைத்து நாடுகளிலிருந்தும் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் இடங்களை மேம்படுத்து வதுடன் பிச்சாவரம், ஒகேனக்கல் முதலிய இடங்களை மேம்பாடடையச் செய்வதற்கு அரசு கவனம் செலுத்தி வருகிறது. இவ்விடங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வளம் பெற்ற இடங்களாகும். இராமேஸ் வரம் மேம்பாட்டுக்கென 28 கோடி ரூபாய்

மொத்தச் செலவீட்டில் பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு, அனைத்து நாட்டு வளர்ச்சிச் சங்க நிதி கோர இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சிற்பக் கலை வளர்ச்சியையும், கோயில் கட்டிடக் கலை வளர்ச்சியையும் படிப்படியாகக் காண்பிக்கின்ற வகையில், மாமல்லபுரத்தில் திறந்த வெளி அரும்பொருட் காட்சியகம் அமைக்கும் திட்டம் ஒன்றுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இளைஞரிடையே சுற்றுலாவை வளர்ப்பதற்கான இளைஞர் இல்லங்கள், சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற எட்டு இடங்களில் இப்போது கட்டப்பட்டு வருகின்றன. சுற்றுலா வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முக்கியமான இடங்களில் சுற்றுலாப் பயணிகள் விடுதிகளைத் தொடர்ந்து அமைத்து வருகிறது. மதுரையில் மூன்று நட்சத்திர விடுதி ஒன்று அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. மற்றொரு பெரிய திட்டம் கோயம்புத்தூரில் முடிவுறும் நிலையில் உள்ளது. சுற்றுலாப் பயணிகளை அழைத்துவர, மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் ஏஜென்டுகளைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அண்மையில் நியமித்துள்ளது. அனைத் திந்தியாவிலும் இவ்வாறு ஏஜென்டுகளை நியமிக்கும் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குவதில் பெருமை கொள்ளலாம்.

### கல்வி

**32.** *1980–81*ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், **கல்வித்** துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூபாய் *238·88* கோடி *1981–82*ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபாய் *255·35* கோடி

ஆக உயர்ந்துள்ளது. பொதுக் கல்வி குறித்த திட்டச் செலவு 1980—81ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 18·71 கோடி ஆக இருந்தது. 1981—82ஆம் ஆண்டு ரூபாய் 23·58 கோடி ஆக அதிகரித்து உள்ளது. வரும் ஆண்டில், கூடுதலாகப் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 1,650 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். அவர்களில், தொடக்கநிலைப் பள்ளி நிலையில் 1,000 ஆசிரியர்களும் உயர்நிலைப் பள்ளி நிலையில் 200 பி.டி. தர ஆசிரியர்களும் புதிதாக நியமிக்கப்படுவர். இடைநிலைப் பள்ளிகளுக்கு 200 தலைமை ஆசிரியர்கள் பி.டி. தரத்தில் நியமிக்கப் படுவார்கள். 250 உடற்பயிற்சி ஆசிரியர்கள் பதவிகள் புதிதாக உருவாக்கப்படும். 250 கைத் தொழில் பயிற்சி ஆசிரியர்கள் பதவி பகுதி நேர நிலையிலிருந்து முழு நேரப் பதவிகளாக மாற்றி அமைக்கப்படும். வரும் ஆண்டில் இடைநிலைப் பள்ளிகளுக்கு புதிதாக 500 தமிழாசிரியர்கள் பதவிகள் உருவாக்கப்படும். பெரிய கோவில்களில் தமிழாசிரியர் களை வேலைக்கு அமர்த்தும் திட்டம் ஒன்றை அரசு தயாரித்து வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் மைய சமையல் கூடத் திட்டம் ரூபாய் 49·7 இலட்சம் செலவில் தொடங்கப்படும். 50 உயர் நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான அறிவியல் கூடத்திற்கான சாதனங்கள் வாங்குவதற்காகவும் 5 கல்வி மாவட்டங்களில் 5 நடமாடும் அறிவியல் கூடங்களைத் தொடங்குவதற் காகவும் ரூபாய் 50·17 இலட்சம் நிதி ஒதுக்கப்பட் டுள்ளது. ரூபாய் 50 இலட்சம் செலவில் அரசுப் பள்ளிகள், மானியம் பெறும் தனியார் பள்ளிகள், உள்ளாட்சி நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகள் ஆகிய வற்றுக்கான கட்டிடங்கள் கட்டும் வேலை மேற் கொள்ளப்படும். 86 மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடங்கள் ரூபாய் 2 கோடி செலவில் கட்ட

அரசு திட்டமிட்டுள்ளது. அரக்கோணத்திலும் கடலூரிலும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் 1—4—1981ல் இருந்து அரசுப் பணியாளர்கள் ஆக்கப்படுவார்கள் என்று அரசு முடிவு எடுத்திருப்பதை மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவர்.

**33.** ஆறு முதல் 14 வயது வரை உள்ளவர்களுக்கு முறை சாராக் கல்வித் திட்டத்தின்கீழ் கல்வி அளிக்க தன்னிறைவுத் திட்ட வளர்ச்சி வட்டாரங்கள் 240 மையங்கள் வரும் ஆண்டில் புதிதாகத் தொடங்கப்படும். புதிதாக எழுத்தறிவு பெற்றுள்ளவர்களுக்கு எழுத்தறிவுக்கு அடுத்த நிலையில் கல்வி அறிவு வழங்க 100 மையங்களும் அமைக்கப்படும். முறை சாராக் கல்விக்காகவும் முதியோர் கல்விக்காகவும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபாய் 160 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

**34.** வரும் ஆண்டில் புதிய பட்டப்படிப்புகளைத் தொடங்குவதற்கு ரூபாய் 10 இலட்சமும் புதிய பட்ட மேற்படிப்புகளைத் தொடங்குவதற்காக ரூபாய் 5 இலட்சமும் மாலை நேரக் கல்லூரிகளில் விஞ்ஞானப் பிரிவில் பட்ட மேற்படிப்புகளைத் தொடங்குவதற்காக ரூபாய் 5 இலட்சமும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன. கூடுதல் வகுப்பு அறைகள், மாணவர் தங்கும் விடுதிகள் கட்டும் பணி 18·5 இலட்சம் ரூபாய் செலவில் வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும். தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றும் காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஒன்றும் நடப்பு நிதி ஆண்டில் ஏற்படுத்தப்படுமென ஆளுநர் உரையில் கூறப்பட்டிருந்தது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சாவூரில் தொடங்குவதென அரசு முடிவு செய்துள்ளது;

இதனை அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15இல் இவ்வாண்டு தொடங்க அரசு முயற்சி செய்து வருகிறது. காரைக்குடியில் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவது குறித்துப் பல்கலைக் கழக மானியக் குழுவுடன் தொடர்பு கொண்டுள்ளோம். மதுரையில் ஒரு கோடி ரூபாய் செலவில் உலகத் தமிழ்ச் சங்கம் நிறுவப்படும்.

**35.** தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி குறித்து அரசு பெரும் கவனம் செலுத்தி வருகிறது. 1980—81ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 152·36 இலட்சம் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கையில், 1981—82ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளில் ரூபாய் 213·71 இலட்சமாகக் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், கோவையில் அரசினர் தொழில் நுட்பக் கல்லூரியில் ரூபாய் 50 இலட்சம் செலவில் கணக்கீட்டுப் பொறிப் பிரிவு ஒன்று அமைக்கப்படும். காரைக்குடியில் அழகப்பச் செட்டியார் பொறியியல்—தொழில் நுட்பக் கல்லூரியில் பட்டப் படிப்பு அமைப்புடன் கூடிய ஆய்வுக் கூடம் (Systems Laboratory) ஒன்றை ஏற்படுத்த ரூபாய் 22·38 இலட்சம் செலவில் திட்டம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு தொழில் நுட்பவியல் கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்கள் தங்கும் விடுதிகளில் கூடுதலாக இல்லங்கள் கட்டுவ வதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 7 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பல பிரிவுகளில் புதிய பாட முறைகளைத் தொடங்குவதற்காக வரும் ஆண்டில் அரசு ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கி யுள்ளது.

## விளையாட்டு, இளைஞர் நலத் துறை

**36**. தமிழ்நாட்டில் விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டுகள், மேனிலை அடைவதில் அரசு அக்கறை காட்டி வருகிறது. இதற்கென அமைக்கப் பட்ட துறை ஒன்று இளம் வயதிலேயே விளையாட்டு களில் ஆற்றலுள்ளவர்களைக் கண்டுபிடித்து அவர்களது ஆற்றலை வளர்க்கப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 1981–82-ல் புதுக்கோட்டை, பெரியார் மாவட்டங்களில் திறந்த வெளி விளையாட்டு அரங்குகள் கட்டும் பணி தொடங்கப்படும். இரு மாவட்டங்களின் தலைமையிடங்களில் நீச்சல் குளங்கள் கட்டப்படும். 150 ஊராட்சிகளில், கிராம விளையாட்டு நிலையங்கள் அமைக்கப்படும். இளம் வயதிலேயே ஆற்றல் பெற்ற விளையாட்டு வீரர்களைத் தெரிந்தெடுக்க அடுத்த ஆண்டில் ''இளமையிலேயே ஆற்றலைக் கண்டுபிடித்துப் பயிற்சியளிக்கும்'' திட்டம் விரிவாக மேற்கொள்ளப்படும். கட்டிடத்திற்குள் விளையாட்டுகள் நடத்துவதற்கான விளையாட்டு அரங்கம் ஒன்றை அடுத்த ஆண்டு சென்னை மாநகரில் இவ்வரசு கட்டக் கருதியுள்ளது.

## மருத்துவம்

**37**. கிராமப் பகுதிகளில் சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்கிற கொள்கைக்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அடுத்த ஆண்டில் 20 தொடக்க சுகாதார நிலையங் களைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மருத்துவமனைக்குரிய வசதிகளைச் செய்து கொடுப் பதற்கென, தற்போதுள்ள 14 நிலையங்கள், 82 இலட்சம் ரூபாய் செலவில் தரமுயர்த்தப்படும். இயங்கி வரும் மருத்துவ ஊர்திப் பிரிவுக்கென ஒதுக்கப்படும் தொகை 15,000 ரூபாயிலிருந்து

20,000 ரூபாயாக உயர்த்தப்படும். 6 முதல் 11 வயதுள்ள பள்ளிச் சிறார்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யும் திட்டம் நடப்பாண்டில் 20 தொடக்க சுகாதார நிலையங்களில் மேற்கொள்ளப் பட்டது; இது அடுத்த ஆண்டில் 50 தொடக்க சுகாதார நிலையங்களிலும் 25 நகராட்சிகளிலும் மேற்கொள்ளப்படும். முத்தடுப்பு ஊசி போட்டு, சிறார்களுக்கு நோய் வராமல் பாதுகாக்கும் திட்டம், மேலும் 50 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்படும். இத்தகைய ஏற்பாடுகளினால் 1981—82-ல் 8.5 இலட்சம் சிறார் கூடுதலாகப் பயனடைவர். அதே சமயத்தில் நகர்ப்பகுதி மக்களின் தேவைகளையும் அரசு புறக்கணிக்கவில்லை. அனைத்து நாடுகள் உடல் ஊன முற்றோர் ஆண்டாகிய இவ்வாண்டில் மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் உறுப்பு பொருத்தும், மறுவாழ்வு அளிக்கும் நிலையம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கெனப் புதிய கட்டிடம் 24.50 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்படும். அரசுப் பொது மருத்துவ மனையில் குண்டிக்காய் மாற்றியமைக்கும் பிரிவும், மதுரை மருத்துவக் கல்லூரியில் நச்சு நுண்ம ஆய்வியல் பிரிவும் அடுத்த ஆண்டில் தொடங்கப்படும். சென்னை மாநகரின் வட பகுதிச் சிறார்கள் பயனடைய, ஸ்டான்லி மருத்துவ மனையில், குழந்தை நோயியல் தனிப்பிரிவு ஒன்று தொடங்கப்படும். பெரம்பூரில் 170.91 இலட்சம் ரூபாய் செலவில் புறநகர் (Peripheral) மருத்துவமனை ஒன்று புதிதாகக் கட்டப்படும். அடுத்த ஆண்டில், கல்லூரி இணைந்த மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை 15,050ஆக உயர்த்தப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் தற்போதுள்ள,

4,631 படுக்கைகளுக்கு மேலாக 507 படுக்கைகள் சேர்க்கப்படும். அடுத்த நிதி ஆண்டில் விபத்து அவசர உதவித் திட்டம், 181.38 இலட்சம் ரூபாய் செலவில் 4 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் அனைத்திலும் மின் உற்பத்தி பதிலி இயந்திரங்கள் வைக்கப்படும். இதற்காக, அடுத்த ஆண்டில் 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**38**. உடல் நலன் தொடர்பான அனைத்தும் இடம் பெறும் விரிவானதோர் உடல்நலப் பாதுகாப்புத் திட்டம் 1981-82ஆம் ஆண்டில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும். மகப்பேறு—குழந்தை நலன், குடும்ப நலன், நோய்த் தடுப்புப் பணிகள் ஆகியவற்றுக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கும் வகையில், கிராமப் புற மருத்துவமனைகளில் இன்றியமையா அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதும் இத்திட்டத்தில் இடம் பெறும். 'டேனிஷ் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம்' இதற்கு நிதியுதவி செய்யும். சேலம், தென்னார்க்காடு மாவட்டங்களில் ஐந்தாண்டுகளில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இதற்கு 14 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத் திட்டம் செயற்படுத்தப்படும் பகுதியிலுள்ள மக்களின் நல வாழ்வு சிறப்புடன் அமையவேண்டுமென்பதும் சமூகத்தின் நலிந்த பிரிவினர் மேன்மையுற வேண்டு மென்பதுமே இதன் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு 1981-82ஆம் ஆண்டில், 2.40 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இந்திய முறை மருத்துவத்திற்கு 1975-76ஆம் ஆண்டில் 41.25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டது. இத்தொகை, 1980—81ஆம் ஆண்டில் 102.37 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்திய முறை மருத்துவத்தில் இவ்வரசு பெரிதும்

அக்கறை கொண்டுள்ளது. இதைக் கருதியே, அடுத்த ஆண்டில் 200 தொடக்கச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகளைத் தொடங்குவதாக அரசு அறிவித்துள்ளது. இதற்கு 62 இலட்சம் ரூபாய் செலவாகும். இராமநாதபுரம், தருமபுரி, சிதம்பரம் ஆகிய இடங்களிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் குழந்தைகளுக்கென 15 படுக்கைகள் கொண்ட வார்டுகள் ஏற்படுத்தப்படும். சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையில், 24 படுக்கைகள் கொண்ட வார்டு ஏற்படுத்தப்படும். திண்டுக்கல், வேலூர் ஆகிய இடங்களிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில், சித்த மருத்துவப் பிரிவுக்கென்றே தனிக் கட்டிடங்கள் கட்டப்படும். இதற்கு 5 இலட்சம் ரூபாய் செலவாகும். இத்திட்டங்கள் அனைத்தையும் செயற்படுத்துவதற்காக, இந்திய முறை மருத்துவம் என்பதன்கீழ் நிதி ஒதுக்கீடு, 171·47 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

**39**. இவ்வாண்டில், 'தொடர் கதிர் வீச்சியக்க முப்பரிமாண உருப்பதிவு கணி பொறி' (CAT. Scanner), இதயத் துடிப்புப் பதிவுப் பொறி (Echo Cardiogram) என்னும் விலையுயர்ந்த நவீன மருத்துவக் கருவிகள் இரண்டினைப் பயனுக்குக் கொண்டுவந்த பெருமையைச் சென்னை, பொது மருத்துவமனை பெற்றிருக்கிறது. மூளை, இதய நோயினால் அவதியுறும் ஏராளமான நோயாளிகளுக்கு இது ஒரு சீரிய வசதியாக அமையும். சென்னை மத்திய சிறைச் சாலையைச் சென்னைக்கு வெளியே ஓரிடத்தில் அமைத்துவிட்டு, சென்னை மத்திய சிறைச்சாலை இருக்கும் இடத்தைச் சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் கிடைக்கும் வசதிகளைப் பெருக்குவதற்கான செயற்குறிப்பை அரசு ஆலோசித்து வருகிறது.

## குடும்ப நலன்

**40**. குடும்ப நலத் திட்டம் இம் மாநிலத்தில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் 1,82,000 பேருக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதென இலக்கு குறிக்கப் பட்டது; 1981 சனவரி இறுதிவரை, 101,253 பேருக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப் பட்டுள்ளது. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை களில் மகப்பேறுக்குப் பின் உடனடியாக ஒரு சில நாட் களுக்குள் கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய, கூடுதலாக 10 படுக்கைகள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. 14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில், மகப்பேறுக்குப் பின் உடனடியாக ஒரு சில நாட்களுக்குள் கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதெற்கென 20 படுக்கைகள் கொண்ட வார்டுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றைக் கட்ட 28·60 இலட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. கருத்தடை அறுவை சிகிச்சை தரமானதாக இருக்கவும், மதிப்பீட்டுக்குழு சுட்டிக்காட்டிய ஏனைய முறை கேடுகளைப் போக்கவும் ஏதுவாக, குடும்ப நலத் திட்ட மும்முரப் பிரச்சாரத்தைச் செம்மைப்படுத்த, அரசு இவ்வாண்டில் சிறிது காலம் நிறுத்தி வைத்திருந்த இத் திட்டம் தற்போது ஒரு சீராக, தொடர்ந்து, ஆண்டு முழுதும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

## கிராம வளர்ச்சி.

**41**. 'வேலைக்கு உணவளிக்கும் திட்டமும்', அதற்குப்பதிலாக நிறைவேற்றப்பட்டுவரும் 'கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டமும்', முறைப்படித் தேர்ச்சி பெற்றிராத கிராமத் தொழிலாளர்களுக்குப் பெருமளவு வேலைவாய்ப்புகள் அளித்து, சமுதாயத் திற்கு நிலையான சொத்துக்களை உருவாக்கியுள்ளது. இத் திட்டங்களின்கீழ், நடப்பாண்டில், 768.5 இலட்சம் ரூபாயையும் 60,000 டன் அரிசியையும் இந்திய அரசு

ஒதுக்கீடு செய்துள்ளது. 1—4—1980ஆம் நாளி லிருந்து பிப்ரவரி 1981 இறுதிவரை, 8.36 கோடி ரூபாய் மதிக்கத் தக்க பணிகள் முடிக்கப் பெற்றுள்ளன. உறுதி யான வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ், பிப்ரவரி இறுதிவரை, ஏறக்குறைய 3 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது.

## தன்னிறைவுத் திட்டம்.

**42.** மிகவும் முக்கியமான திட்டங்களில் தன்னிறைவுத் திட்டமும் ஒன்றாகும்; இத்திட்டம் கிராமப் பகுதிகளில் செயற்படுத்தப்பட்டு வருகிறது; 69 வளர்ச்சி வட்டாரங்களில் பணிகள் நடந்து வருகின்றன, இத்திட்டத்தில்—

(i) குடிநீர் வழங்கல்;
(ii) இணைப்புச் சாலைகள்;
(iii) மதகுப் பாலங்கள்;
(iv) ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் இடுகாடுகளுக்கும் பாதைகள்;
(v) சிறு பாசன ஆதாரங்கள் மேம்பாடு;
(vi) கிராமப்புற மருந்தகங்கள்;
(vii) மகப்பேறு-குழந்தை நல நிலையங்கள்;
(viii) பள்ளிக் கட்டிடங்கள்;
(ix) ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் (கிராமப்புற வீட்டு வசதி திட்டம்)

ஆகிய இன்றியமையாப் பணிகள் மேற்கொள்ளப் படுவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிந்திருப்பர். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எய்தியுள்ள சாதனைகள் பாராட்டுக்குரியவை ஆகும். 6,796 கிலோ மைல் இணைப்புச் சாலைகள், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் இடுகாடுகளுக்கும் 976 கிலோ மீட்டர் பாதைகள், 942 பள்ளிக் கட்டிடங்கள்,

81 கிராமப்புற மருந்தகங்கள், 237 மகப்பேறு-குழந்தை நல நிலையங்கள் ஆகியவை குறித்த பணிகள் இந்த நிதியாண்டு இறுதியில் நிறைவுபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் வெற்றி பெற்றுள்ளதால், 1981–82ஆம் ஆண்டில் மேற் கொண்டும் 50 வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டத்தை அரசு செயற்படுத்தும்.

## கிராமக் குடிநீர் வசதி

**43.** வகை II எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் குடிநீர் வசதிசெய்து கொடுக்கும் திட்டம் முடிக்கப் பெற்றுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் வரும் வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள குடியிருப்பு களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கென்றே, 1981–82 ஆண்டுக்கான நிதி ஒதுக்கம் 24.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

## கிராம வீட்டு வசதித் திட்டம்

**44.** இவ்வரசு, 1979ஆம் ஆண்டில் தொடங்கிய கிராமப்புற வீட்டு வசதித் திட்டம், மாபெரும் வெற்றி கண்டுள்ளது. ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதென முதலில் இலக்கு குறிக்கப்பட்டிருந்தது. எனினும், இக்கால அளவில் 2 இலட்சம் வீடுகள் கட்ட அரசு உதவி செய்யக் கருதியுள்ளது. 1980 ஜூலை முதல் 1981 பிப்ரவரி வரையிலான கால அளவில் 73,756 கடன் மனுக்களுக்கு 22·68 கோடி ரூபாய் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அக்கால அளவில், 19,952 வீடுகள் கட்டி முடிக்கப்பெற்றன. அவற்றில் 15,009 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கென்று கட்டப்பட்டவை ஆகும். 1981–82ஆம் ஆண்டில், 40,000 வீடுகள் கட்ட நிதியுதவி செய்யப்படும்.

## குடிசை மாற்று வாரியம்

**45.** குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணி நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. *1980* வரை, *29* கோடி ரூபாய் செலவில், *27,783* அடுக்குத் தொடர் வீடுகள் (Tenements) கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், ரூ. *3·24* கோடி செலவில், அத்தகைய வீடுகள் *3,200* கட்டி முடிக்கப்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில், அத்தகைய வீடுகள் ரூ. *3.42* கோடி செலவில் மேலும் *3,500* கட்டப்படும். இத்திட்டத்திற்கென, குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு, *1980–81* ஆம் ஆண்டில் *1,50* இலட்சம் ரூபாய் நிதியுதவி செய்யப்பட்டது; *1981–82*ஆம் ஆண்டில் *2,50* இலட்சம் ரூபாயாக நிதியுதவி உயர்த்தப்பட்டுள்ளது.

## ஊனமுற்றோர் நலன்

**46.** ஊனமுற்றோர் சர்வதேச ஆண்டாகிய இந்த ஆண்டில், உடலூனமுற்றோர் நலனுக்காக அரசு பல புதிய திட்டங்களைத் தொடங்கும். ஊனமுற்றோருக்குச் சிறப்பாகப் பயிற்சியளித்து, அவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகளைத் தேடிக்கொடுப்பதற்கென வட்டாரப் பயிற்சி நிலையங்கள் மூன்றினை அரசு ஏற்படுத்தக் கருதியுள்ளது. பார்வையற்றோருக்கான பள்ளிகள் இரண்டும், காது கேளாதோருக்கான பள்ளிகள் இரண்டும், கைகால் முடமாகி மிகவும் உடலூனமுற்றோருக்கான நிலையம் ஒன்றும் அடுத்த ஆண்டில் தொடங்கப்படும். வேலையற்ற பட்டதாரிகளுக்குக் கொடுக்கப்படுகிற உதவித்தொகை ஒருசில நிபந்தனைகளைச் சிறிது தளர்த்தி உடலூனமுற்றோருக்கும் கொடுக்கப்படும். உடலூனமுற்றோர் சுயவேலை வாய்ப்பு முயற்சிமூலம் சிறு தொழிற்கூடங்களைத் தொடங்க இயலும் வகையில், அவர்

களுக்கு அரசு உதவித் தொகையை அளிக்கும். செயற்கை உறுப்புகள் பொருத்தும் துணை நிலையங்கள் இரண்டும், மதுரையில் உறுப்பு இணைப்பு-மறுவாழ்வு நிலையமும் அடுத்த ஆண்டில் தொடங்கப்படும். இவர்களுக்கெனத் தகுந்த திட்டங்களைத் தயாரிப்பதற்காக, உடலூனமுற்றோர்களை இனங்கண்டறிந்து, அவர்களது எண்ணிக்கையைத் கணக்கிட்டு அறிவது இன்றியமையாததாகிறது. உடலூனமுற்றோர் எத்தனை பேர் என்பதை அரசு கணக்கெடுக்கும். தொடர் திட்டங்களைத் தவிர உடலூனமுற்றோர் நலனுக்கான திட்டங்களுக்கு 1981–82-ல் 59 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஊனமுற்ற சிறார்களைப் பேருந்துகளில் இலவசமாக ஏற்றிச் செல்லும் திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் செயல் படுத்தப்படும்.

## மகளிர், குழந்தைகள் நலன்

**47**. வறிய மகளிரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு திட்டங்களை அரசு செயற்படுத்தி வருகிறது. வறிய மகளிர் 1,000 பேருக்கு வணிகமுறையில் கணக்கு எழுதும் தொழில் பயிற்சியளிக்கும் புதிய திட்டம் 1981–82ஆம் ஆண்டில் செயற்படுத்த எடுத்துக் கொள்ளப்படும். கைம் பெண்களின் மக்கள் மேல்நிலைப் பள்ளிகளில் படிப்பதற்கு அவர்களுக்கு நிதியுதவி செய்யப்படும். குறைந்த விலையில் '' தாலிக்குத் தங்கம் '' வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும். 1981–82ஆம் ஆண்டில் முதல் கட்டமாக, ஏழைக் கைம் பெண்களின் மகளிர் திருமணத்திற்குக் குறைந்த விலையில், '' தாலிக்குத் தங்கம் '' வழங்கப்படும். இதற்காக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

48. 1981–82ஆம் ஆண்டில், குழந்தை நல நிலையங்கள் 100 தொடங்கப்படும்; 20 நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்படும். மேலும், சென்னை மாநகரில், குழந்தை நல வளர்ச்சிப் பணி ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் குழந்தை காப்பகங்கள் (Creches) 100 தொடங்கக் கருதப்பட்டுள்ளது. பெண் தொழிலாளர்களின் சிறார்களைக் கவனித்துக் கொள்ள 50 குழந்தை காப்பகங்கள் கோயம்புத்தூரிலும் மதுரையிலும் தொடங்கப்படும். உலக வங்கி சத்துணவுத் திட்டம், 1981–82ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்திலுள்ள 33 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்படும். இதற்கென, வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 8·54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சுகாதார துணை நிலையங்கள் கட்டுவது, சத்துணவுப் பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரைத் தெரிந்தெடுத்துப் பயிற்சியளிப்பது, துணைச் சத்துணவு வழங்குவது ஆகிய பணிகள் அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

## ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் நலன்

49. ஆதி திராவிட மாணவர்களுக்கு 15 மாணவர் இல்லங்கள் வரும் ஆண்டில் தொடங்கப்படும். உயர்நிலைப் பள்ளி மாணவரில்ல உணவுச்செலவை முன்னிட்டு இல்ல மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகை 15 ரூபாய் உயர்த்தப்படும்; மானியம் பெறும் மாணவர் இல்லங்களில் தங்கிப்பயிலும் ஆதி திராவிட, பழங்குடி வகுப்பு, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகை 10 ரூபாய் உயர்த்தப்படும். இதற்கு ஒரு கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். 1981–82ஆம் ஆண்டில், ஆதி திராவிட, பழங்குடியினர் மாணவர் மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்கு 2,45 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளி அளவில், ஆதி திராவிட, பழங்குடி வகுப்பு மாணவர்களுக்குத் தனிப்

பயிற்சி அளிக்கும் புதிய திட்டத்தை முன்னோடித் திட்டமாக 1981—82ஆம் ஆண்டில் அரசு மேற்கொள்ளக் கருதியுள்ளது. மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் 500 உயர்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் தொடங்கப்படும். ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம், வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய திட்டக்குழு நிர்ணயித்துள்ளபடி, ஆண்டுதோறும் 7·8 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆதி திராவிடர் வீட்டு வசதி-வளர்ச்சிக் கழகத்தில் பங்கு மூலதன முதலீடு செய்ய ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்கள் நன்மை பெறும் வகையில் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் இதன் நோக்கமாகும். மலை வாசிகளுக்கு உதவி செய்வதற்காக சிறு தொழில்கள் தொடங்கும் தனித் திட்டம் வகுக்கப்படும்.

## பிற்பட்டோர் நலன்

**50.** பிற்பட்ட வகுப்பினரைச் சார்ந்த மாணவர்களுக்காக 34 இல்லங்கள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டு உள்ளன. 1981—82ஆம் ஆண்டில் 13·16 இலட்சம் ரூபாய் செலவில் 40 புதிய இல்லங்கள் தொடங்கப்படும். 3 இல்லங்களின் கட்டிடங்கள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் நரிக்குறவர்கள், ஒட்டர்கள், முடிதிருத்துவோர். சலவைத் தொழிலாளர் ஆகியோர்களுக்கு வீட்டுமனைகள் வழங்க நில எடுப்பு செய்யும் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 15 இலட்சம் ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. பிற்பட்டோர் நலன் குறித்த செலவு 1980—81ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 7,56 இலட்சமாக இருந்தது.

1981–82ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபாய் 7,99 இலட்சமாக உயர்த்தப் பட்டு உள்ளது.

## புயல் காப்பிடங்கள்

**51**. தமிழ்நாட்டின் கடலோரப் பகுதி, புயலின் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்காகிறது. ஆகவே, புயல் வீச்சுப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குப் புயல் காலங்களில் காப்பிடங்கள் பலவும் அமைப்பதற்காக, கடற்கரை நெடுக ஆங்காங்கே புயல் துயர் தணிப்பு நிலையங்கள் 82 கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது. செலவுத் தொகையில் 50 சதவீதத்தை நிதியுதவியாக இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையும் எஞ்சிய 50 சதவீதத்தைத் தமிழ்நாடு அரசும் ஏற்று, அத்தகைய துயர் தணிப்பு நிலையங்கள் 25 கட்டப்படுகின்றன. இதே அடிப்படையில், யுனிசெஃப் மூலம் 2 காப்பிடங்கள் கட்ட கனடா அனைத்து நாடுகள் நிறுவனம் உதவி வருகிறது. புயல் துயர் தணிப்பு நிலையங்கள் 50 கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய் வழங்க ஐரோப்பிய பொருளாதார அமைப்பு முன்வந்துள்ளது. இக்காப்பிடங்கள் கட்டும் பணி சிறப்பாக நிறைவேறி வருகிறது.

## வருவாய்த் துறை நிர்வாகம்

**52**. வருவாய்த் துறை பிர்கா ஆய்வாளர்களுக்காக அலுவலகம்—குடியிருப்புக் கட்டிடம் கட்டும் பணியை அரசு படிப்படியாக எடுத்துக் கொண்டுள்ளது. 1981–82-ல் 50 இலட்சம் ரூபாய் செலவில், கூடுதலாக 200 கட்டிடங்கள் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்படும். கிராமச் சாவடிகள் கட்டும் பணியும் 10 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப் படும். அடுத்த ஆண்டில், வருவாய்க் கோட்ட

அலுவலகங்கள் இரண்டும், வட்ட அலுவலகங்கள் மூன்றும் 27·50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கட்டப்படும். புதிதாக ஏற்படுத்தப்பட்ட பெரியார் மாவட்டத்திற்காக ஈரோட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் ஏனைய அலுவலகங்களுக்கும் புதிய கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப்பணியை எடுத்துக்கொள்ள 1981-82ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 126 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி எடுத்துக் கொள்ளப்பட்டிருப் பதால், துணை வட்டங்களைத் தரமுயர்த்தும் பணி 1980—81-ல் நிறுத்தி வைக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் சுயேச்சைப் பொறுப்புள்ள துணை வட்டங்கள் ஆறும், துணை வட்டங்கள் பத்தும், 32·32 இலட்சம் ரூபாய் செலவில் முழுமையான வட்டங் களாகத் தரம் உயர்த்தப்படும்.

## காவல் துறை

**53.** தமிழ்நாட்டுக் காவல் துறையினர், திறமை யுடன்—பாரபட்சமின்றிக் கடமையாற்றி வருகின்றனர். மிகவும் கடினமான சூழ்நிலைகளில் பணியாற்றும் இவர் களுக்காக நலப்பணித் திட்டங்கள் பலவற்றை அரசு தயாரித்து வருகிறது. மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் ஏற்பாடு காவலர்கள் குடும்பங் களுக்குப் பெரிதும் நன்மை பயப்பதாக உள்ளது. ஓர் ஆண்டில் இதற்கு 4 கோடி ரூபாய் செல வாகிறது.

**54.** காவலர்களிடையே பணி உற்சாகத்தை வளர்க்கவும், அஞ்சாமை, நம்பிக்கை உணர்வுகளை ஊட்டவும் கருதி, தீரச் செயல் புரியும்போது உயிரிழந்தவர்களுக்காக 10,000 ரூபாய் சிறப்புக் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும்,

தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழும் 10,000 ரூபாய் மொத்தமாக வழங்கப்படுகிறது. அதே போன்று காயமுற்றவர்களுக்கும் 1,000 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. கடமை கருதி வீரச் செயல் புரியும்போது ஏற்பட்ட காயத்தினால் நிரந்தர ஊனமுற்றவர்களுக்கு 5,000 ரூபாய் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. சிறப்புச் சூழ்நிலைகளில் கூடுதல் தொகையும் கொடுக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, திருப்பத்தூர் வட்டக் காவல் நிலையம் அருகே, 1980 ஆகஸ்டு மாதத்தில் உயிரிழந்த காவல் துறை அலுவலர் சிலருக்கு அவ்வாறு கூடுதல் தொகை கொடுக்கப்பட்டது. உயிரிழந்த ஒவ்வொருவர் குடும்பத்திற்கும் 30,000 ரூபாய் கூடுதல் கருணைத் தொகையாக வழங்கப்பட்டது. இவ்வாறாக, ஒவ்வொருவர் குடும்பத்திற்கும் மொத்தம் 50,000 ரூபாய் நிதி உதவி செய்யப்பட்டது.

**55**. நடப்பாண்டில் இம்மாநிலத்தில் புதிதாக காவல் நிலையங்கள் 16ம், 8 புறக் காவல் நிலையங்களும், காவல் சரகத் தலைமையிடம் ஒன்றும் தொடங்க உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்கள் மூன்று முழுத் தகுதி பெற்ற காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப் பட்டுள்ளன. சமூக விரோத சக்திகளிடமிருந்து கிராம மக்களைப் பாதுகாக்க வேண்டியதைக் கருத்தில் கொண்டு கிராமப் பகுதிகளில் அவசியமான இடங்களில் காவல் நிலையங்களை அரசு தொடர்ந்து ஏற்படுத்தி வரும். 12,000 காவலர்களை நியமிக்க அரசு திட்டமிட்டிருந்தது. அதன் பகுதியாக, இந்த நிதி ஆண்டில் 4,000 காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**56**. உயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகள் (V. H. F. Sets) 350, இருவழி செய்தித் தொடர்புக் கருவிகள் (Walkie Talkies) 1,800 ஆகியவற்றை வாங்க

2 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. காவல் படையை நவீனமாக்கவும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவும் இவை வாங்கப்படுகின்றன. மிக உயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகள் வாங்க 1·2 கோடி ரூபாய்க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**57**. காவல் படையின் மகளிர் பிரிவும் வலுப்படுத்தப்படுகிறது. மகளிர் 60 பேரை சப்-இன்ஸ்பெக்டர்களாகவும், 60 பேரைத் தலைமைக் காவலர்களாகவும் 600 பேரைக் காவலர்களாகவும் நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**58**. தீயணைப்புத் துறை, தொடர்ந்தாற்போல் நிறம்படச் செயல்பட்டு வருகிறது. நீர் தொட்டி மோட்டார் பிரிவு (Mobile Tank Unit), பம்பு இழுவை மோட்டார் வண்டி (Trailor Pump) வான்வழித் தொலைபேசி வசதியுள்ள கார்கள் (Wireless Cars) போன்ற ஆயத்த நிலை தீயணைப்பு என்சின்களையும் தீயணைப்பு நவீன இஞ்சின்களையும் வாங்க முன்னுரிமை அளிக்கக் கருதப்பட்டுள்ளது. வேறு வகை சாதனங்கள் சிலவும் இத்துறைக்கு வாங்கப்பட்டு வருகின்றன. இத்துறையில் செயல்களை வலுப்படுத்தும் வகையில் தீயணைப்பு நிலையங்கள் மேலும் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சில நிலைகளுக்குக் கீழேயுள்ள தீயணைப்புப் பணியாளர்களுக்கு, மலிவு விலையில் சில உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

### அரசு அலுவலர்களுக்குச் சலுகைகள்

**59**. மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளைச் செயல் படுத்துவதன் விளைவாக ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட முரண்பாடுகளைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்ய ஒரு நபர்குழு அமைத்ததை மன்ற

உறுப்பினர்கள் அறிவர். இக் குழு செய்த பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளது—

(அ) சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பதவிகளின் ஊதிய வீதங்கள் மாற்றியமைக்கப்படும்; இவ்வாறு மாற்றியமைக்கப்படும் ஊதிய வீதங்கள் 1—4—1978 முதல் அமுல் செய்யப்பட்டு, அதன் நிதிப் பலன் (Monetary Benefit) 1—1—1981 முதல் அளிக்கப்படும்.

(ஆ) தற்போது ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு ஊதியத்தில் வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவை கணக்கில் கொள்ளப்படுவதில்லை. இனி, அந்த இரண்டு படிகளும் ஒப்புவிப்பு ஊதியத்தில் சேர்த்து அளிக்கப்படும்.

(இ) தேர்வு நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் இருப்பவர்களுக்கும் தேக்க நிலை ஊதிய உயர்வு அளிக்கப்படும்.

(ஈ) தேர்வு நிலை அளிக்கப்படாத சாதாரண நிலைப் பதவியிலுள்ளவர்களுக்கும், தேர்வு நிலைப் பதவியிலுள்ளவர்களுக்கும் அவர்கள் தத்தம் ஊதிய வீதத்தின் உச்ச நிலையை அடைந்தால், தேக்கநிலை ஊதிய உயர்வு தொடர்ந்து அளிக்கப்படும்.

(உ) தேக்க நிலை ஊதிய உயர்வுக்கான ஊதிய உச்ச வரம்பு ரூ. 1,500-லிருந்து ரூ. 2,000 ஆக உயர்த்தப்படும்.

(ஊ) தேர்வு நிலையில் அலுவலரின் ஊதியத்தை நிர்ணயம் செய்யும்போது, ஊதியத் தரங்கள் 8 முதல் 11 வரையில் உள்ளவர்களுக்கு ரூ. 15ம், 12 முதல் 16 வரையிலுள்ளவர்களுக்கு ரூ. 10ம் குறைந்தபட்ச நன்மையாக அளிக்கப்படும்,

(எ) கூடுதல் பொறுப்புகளை உடைய உயர் பதவிக்கு அலுவலர் பதவி உயர்வு பெறும்போது, கீழ் பதவியில் பெற்ற ஊதியத்தைவிட 5 சதவீதம் குறைந்த பட்ச நன்மை பெறும் வகையில் ஊதியம் நிர்ணயிக்கப் படும்.

(ஏ) நிரந்தரமாக நியமிக்கப்பட்ட அல்லது தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்துள்ள அலுவலர்களுக்கு விடுப்புப் பயணச் சலுகை ஒன்று அளிக்கப்படும். இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை, அலுவலர்கள் பணிபுரியும் இடத்திலிருந்து 240 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட தூரத்தில் தமிழகத்திலுள்ள எந்த இடத்திற்கும் தங்கள் குடும்பத்தினருடன் பயணம் செய்ய இச்சலுகை அளிக்கப்படும். இரயில் கட்டணத்தில் ஒரு வழிச் செலவை அரசு ஏற்கும். அலுவலர் குறைந்தது 15 நாட்கள் ஈட்டிய விடுப்பில் சென்றால் மட்டுமே இச்சலுகை அளிக்கப்படும்.

(ஐ) மூன்றாவது ஊதியக்குழு அல்லது ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைக்கப்பட் ஊதிய வீதங்களில், 1—4—1978 முதல் 31—3—1979 வரையில் இடைப்பட்ட காலத்தில் ஊதியத்தை நிர்ணயம் செய்ய அலுவலர் மீண்டும் விருப்பம் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. இந்த வாய்ப்பை 31-8-1981க்குள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த முடிவுகளின் விளைவாக, அரசுக்கு ஆண்டிற்கு ரூ. 3 கோடி அளவில் செலவு ஏற்படும்.

**60**. அரசு அலுவலர்களுக்கு மகளின் திருமணத்திற் காகவும், மகனின் திருமணத்திற்காகவும் அளிக்கப்படும் திருமண முன் பணத்தின் தற்போதைய வரம்பான ரூ. 2,000, ரூ. 1,000 முறையே ரூ. 3,000, ரூ. 1,500 ஆக உயர்த்தப்படும்.

**61.** ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற்றவர்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஓய்வூதியத் தொகையை முழுமையாக அளிக்க வேண்டும் என்று ஓய்வூதியம் பெறுபவர்கள் முறையிட்டு வருகின்றனர். சட்டப்படி இவ்வாறு முழுமையாகத் தர கட்டாயம் இல்லா திருப்பினும், ஓய்வூதியம் பெற்றவர்களின் முறையீட்டை கருணை அடிப்படையில் ஏற்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. ஓய்வூதியம் பெறும் அரசு அலுவலருக்கு அவர்கள் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகள் நிறைவுபெற்றவுடன் இச்சலுகை அளிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட சலுகைகள் அனைத்தும் ஆணைகள் பிறப்பிக்கும் தேதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும்.

**62.** சராசரி வாழ்க்கைச் செலவுப் புள்ளி 376ஐக் கடந்துள்ளதால் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் அகவிலைப் படியின் அடுத்த தவணையை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. 1980 டிசம்பர் 1ஆம் தேதி முதல் ரூ. 650 வரை ஊதியம் பெறுவோருக்கு 2·5 சதவீதமும், ரூ. 650க்கு மேற்பட்டவர்களுக்கு 1·875 சதவீதமும் அளிக்கப்படும்.

## ஆண்டுத் திட்டம்

**63.** 1980—81ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் ரூ. 438·61 கோடி அளவிலான ஆண்டுத் திட்டத்திற்கு வகை செய்தது. பிறகு மேற்கொள்ளப் பட்ட பல மாற்றங்களின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டுள்ள 1980—81 ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளிலிருந்து ஆண்டுத் திட்டம் ரூபாய் 4,54 கோடியாக வெளிப்படுகிறது. இதற்கு எதிராக, 1981—82ஆம் ஆண்டுத் திட்டம் ரூ. 514 கோடி அளவில்

அமையலாம் என மத்தியத் திட்டக் குழு வரையறுத்துள்ளது. எனது உரையில் முன்னர் குறிப்பிட்டுள்ள தவிர்க்க முடியாததும் மிக அவசியமும் ஆன சில திட்டங்களின் உயர்வுகள் இந்த அளவிற்குள் மட்டுப்படுத்த இயலாது. வரும் ஆண்டு புதிதாக மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் ரூ. 35 கோடி ஆண்டுத் திட்டச் செலவிற்கு வித்திடுகின்றன. இத்தகைய முக்கிய ஒதுக்கீடுகளையும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட அளவான ரூ. 3150 கோடி அளவையும் இணைத்துப் பரிசீலித்து, ரூ. 563·26 கோடி அளவில் அடுத்த ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய செலவினங்களை ஏற்கனவே கோடிட்டுக் காட்டி உள்ளேன். மின் உற்பத்திக்கு அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து, திட்டச் செலவில் 30 சதவீதம் இதற்கு ஒதுக்கியுள்ளது. ரூ. 169·59 கோடி மின் உற்பத்திக்கும், ரூ. 26·62 கோடி பாசனத்திற்கும், ரூ. 104·69 கோடி வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளுக்கும், ரூ. 55·61 கோடி தொழில் துறைக்கும் ரூ. 37·61 கோடி சாலை மற்றும் போக்குவரத்துத் துறைகளுக்கும், ரூ. 23·58 கோடி கல்விக்கும், ரூ. 25·89 கோடி மருத்துவம், சுகாதாரம் துறைகளுக்கும், ரூ. 51·30 கோடி குடிநீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்கும், ரூ. 33·83 கோடி வீட்டு வசதி நகர் வளர்ச்சி துறைகளுக்கும் ரூ. 17·87 கோடி ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் நலனுக்கும், ரூ. 16·67 கோடி பிற துறைகளுக்கும் செலவிட ஆண்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

## நிதி நிலைமை

**64.** வருவாய்க் கணக்கில் ரூ. 15·39 கோடி அளவில் உபரி இருக்கும் வகையில் வரவுகள் ரூ. 9,82·66 கோடி என்றும், செலவுகள் ரூ. 9,67·27 கோடி என்றும்

ரூ. 15·39 கோடி உபரி என்றும் 1980–81ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. திருத்த மதிப்பீடுகளில் மின்சார வாரியத்திற்கு மானியமாகக் கொடுக்கப்பட்டு, அதனிடமிருந்து பெற வேண்டிய வட்டித் தொகைக்கு ஈடு செய்யப்பட்ட ரூ. 90·58 கோடி வரவுகளிலும், செலவுகளிலும் சேர்க்காமல், வரவுகள் ரூ. 1083·17 கோடி அளவிலும் செலவுகள் ரூ. 1094·47 கோடி அளவிலும் நிகரப் பற்றாக்குறை ரூ. 11·30 கோடி என்றும் வகுக்கப் பட்டுள்ளன. வரி வருவாய் ரூ. 47·32 கோடி அளவிலும், வரி அல்லாத பிற இனங்களிலிருந்து வருவாய் ரூ. 105·75 கோடி அளவிலும், மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவித் தொகை, ஆயத் தீர்வையில் பங்கு ஆகியவை ரூ. 38·04 கோடி அளவிலும் உயர்ந்துள்ளபோதிலும், கடன் திருப்பிச் செலுத்து வதில் விவசாயிகளுக்கு அளித்த சலுகைகளுக்காகக் கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக வருவாய் கணக்கில் இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளது. மின் வாரியம், திட்டங்கள் முதலீடு செய்துள்ள மூலதனத் தொகைக்குக் கிடைக்க வேண்டும் என நிர்ணயித்துள்ள வருவாய்க்குக் குறைவு ஏற்பட்டுள்ளதைச் சரி செய்ய அளித்துள்ள உதவித் தொகை வருவாய்க் கணக்கில் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது. இதே தொகை, மின் வாரியத்திடமிருந்து கிடைத்த வட்டியாகவும் வருவாயாகக் கணக்கிடப்பட்டுள்ளது. திருத்த மதிப்பீடுகள் மூலதனக் கணக்குகளில் ரூ. 93·33 கோடி செலவிற்கு வகை செய்துள்ளது. இச் செலவினம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் ரூ. 94·21 கோடி யாகும். கடன் கணக்குகளில் நிகர செலவினம் வரவு செலவுத் திட்ட கணக்குகளில் ரூ. 76·33 கோடி என்றும், திருத்த மதிப்பீடுகளில் ரூ. 77·55 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுக் கடன் கணக்கில் நிகர வருவாய் வரவு-செலவுத் திட்ட

மதிப்பீட்டில் ரூ. *110·83* கோடியாக இருந்தது, திருத்த மதிப்பீட்டில் ரூ. *109·70* கோடியாக அமைந்துள்ளது. மொத்தமாக, தொகு நிதியில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ *44·32* கோடியாக இருந்த நிகரப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீட்டில் ரூ. *72·48* கோடியாக அளவிடப்பட்டுள்ளது. பொதுக் கணக்கில் நிகரமாக இருக்கும் தொகையைச் சேர்த்து நிகர உபரியாக ரூ. *33* இலட்சம் என வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டது, இப்போது திருத்த மதிப்பீட்டில் இது நிகரப்பற்றாக்குறை ரூ. *3·64* கோடி என்று திருத்தப்பட்டுள்ளது. ஆரம்ப இருப்பான ரூயாய் (—) *7·83* கோடியையும் சேர்த்து இவ்வாண்டு இறுதியில் கையிருப்பு ரூ. (—) *11·47* கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**65**. *1981–82*ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. *1128·27* கோடி என்ற அளவிலும், செலவுகள் ரூ. *1137·84* கோடி என்ற அளவிலும், நிகரப்பற்று ரூ. *9·57* கோடி அளவிலும் மதிப்பிடப் பட்டுள்ளன. மூலதனக் கணக்கில் நிகரச் செலவு ரூ. *135·99* கோடியாக உயர்ந்துள்ளது. கடன் கணக்கில் ரூ. *121·02* கோடி நிகரச் செலவிற்கு வகை செய்யப்பட்டு உள்ளது. பொதுக் கடன் கணக்கில் கிடைக்கும் நிகர வருவாயான ரூ. *112·62* கோடியையும் சேர்த்து, தொகு நிதியில் நிகரப்பற்றாக்குறை ரூ. *153·96* கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுக் கணக்கில் நிகர ரூபாய் *42·47* கோடி உபரியைச் சேர்த்து இறுதி நிகரப் பற்றாக்குறை ரூபாய் *111·49* கோடி என்ற அளவிலும், ஆண்டு இறுதிக் கையிருப்பு ரூபாய் (—) *122·96* கோடி அளவிலும் அமைய **1981–82ஆம்** ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**66.** பொதுநலத் திட்டங்களை நிறைவேற்றவும், அளவில் பெரிய ஆண்டுத் திட்டத்தைச் செயல்படுத்தவும் சில வருவாய் ஈட்டும் முயற்சிகள் தேவை என்பதை முதலில் குறிப்பிட்டுள்ளேன். இந்த வளர்ச்சித் திட்டங்களைச் செயலாக்க சில வரி வீதங்களில் மாற்றங்கள் செய்வது அவசியமாக உள்ளது. கூடுமானவரையில் வரிச்சுமை குறைவாகவும், ஏழை எளிய மக்களைத் தாக்கா வண்ணமும் இருக்க வேண்டும் என்ற கருத்தைக் கவனத்தில் கொண்டு இந்த அரசு பின்வரும் சில மாற்றங்களைச் செய்ய முற்பட்டுள்ளது.

**67.** பல ஆண்டுகளாகச் சென்னை மாநகராட்சி போதிய நிதி வசதி இல்லாமல் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. மாநகராட்சி எல்லைக்குள் பல வசதிகளை மேம்படுத்துவதற்கு அண்மையில் உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. கூடுதலான பொறுப்புகளைச் சமாளிக்க நிலையான வகையில் மாநகராட்சிக்கு நிதி உதவி செய்வது அவசியமாகிறது. ஆகவே, தற்போது சென்னை மாநகராட்சி எல்லையிலும், சென்னை மாநகரைச் சுற்றிலும் 32 கி. மீ. பகுதியிலும் விதிக்கப்படும் விற்பனைவரி மீதான மேல்வரி தற்போதுள்ள 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்படுகிறது. கிடைக்கும் கூடுதல் வருவாயிலிருந்து கணிசமான பகுதி மாநகராட்சிக்கு ஒதுக்கப்படும். இந்த மாற்றங்களுக்கான சட்ட வரைவு இக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

**68.** விற்பனை, பரிமாற்றம்(Exchange), அன்பளிப்பு (Gift) ஆகியவற்றின் பத்திரங்கள் மீதான முத்திரைத் தீர்வை சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சி நகரங்களைத் தவிர பிற இடங்களில் வசூலிக்கப்படும்

விகிதமான 6 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக உயர்த்தப்படும். அடைமானம் (Mortgage), குத்தகை (Lease) பாகப்பிரிவினை (Partition) விடுதலை (Release) குறித்த பத்திரங்கள் மீது 16வது பிரிவின்படி விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை சொத்து மதிப்பில் முதல் ஆயிரம் ரூபாய் வரையில் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் ரூபாய் 2·50 லிருந்து ரூபாய் 3 ஆகவும், ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒவ்வொரு ஐநூறு ரூபாய் அல்லது அதன் பகுதிக்கு ரூபாய் 13லிருந்து ரூபாய் 15ஆகவும் விகிதம் உயர்த்தப்படுகிறது. சொத்து எழுதி வைப்பது (Settlement) குறித்த பத்திரங்கள் மீதான முத்திரத்தீர்வை 100 ரூபாய்க்கு ரூபாய் 2.50 என்ற விகிதத்திலிருந்து நகரங்களில் 8 சதவீதமாகவும், பிற இடங்களில் 7 சதவீதமாகவும் மாற்றியமைக்கப்படும். விடுதலைப் பத்திரங்கள் மீது 55வது பிரிவின்படி விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை செட்டில்மென்ட் பத்திரங்கள் தீர்வை அளவிற்கு மாற்றியமைக்கப்படும். விற்பனை வரிமீதான மேல்வரி, முத்திரைத் தீர்வை மாற்றங்களுக்குத் தேவையான சட்ட திருத்தங்கள் கொண்டு வரப்படும்.

**69**. பெட்ரால், டீசல் மீதான வரிகளை விலையின் அடிப்படையில் கணக்கிட அண்மையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. தமிழகத்தில் பெட்ரோல் விற்பனை மீது விதிக்கப்படும் 5 சதவித வரியை, அண்டை மாநிலங்களான கேரளம் (15 சதவீதம்) கர்நாடகம் (12.5 சதவீதம்) ஆந்திரப் பிரதேசம் (11 சதவீதம்) ஆகிய மாநிலங்களில் விதிக்கப்படும் வரி விகிதங்களுடன் ஒப்பிட்டு 11 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே போன்று, ஆந்திரப் பிரதேசம் (10 சதவீதம்), கேரளம் (20 சதவீதம்) கர்நாடகம் (10 சதவீதம்) ஆகிய மாநிலங்களில் டீசல் மீது விதிக்கப்படும் விற்பனை வரியைவிட தமிழ்

நாட்டில் குறைவாக (9 சதவீதம்) வசூலிக்கப்படுவதால், அதை 11 சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

**70.** வரி வீதங்களில் இந்த உயர்வுகளை அறிவிக்கும் அதே சமயத்தில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி யையும், வாணிபத்தையும் ஊக்குவிக்கும் வகையில் சில சிறிய விற்பனைகளுக்குச் சலுகை அளிக்கும் வகையிலும் வரிகுறைப்பைச் செய்ய அரசு எண்ணியுள்ளது. தமிழ் நாட்டில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு ஊக்க மளிக்கும் வகையில், மத்திய அரசு, இரயில்வே, மாநில அரசு ஆகியவை வாங்கும் பொருள்கள்மீது 4 சதவீதத் திற்குமேல் விதிக்கப்பட்டுவரும் பொது விற்பனை வரி வீதங்கள் அனைத்தும் மத்திய விற்பனை வரி வீதமான 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. வெளி மாநிலங் களிலிருந்து விற்பனை செய்ய முன்வருவோருடன் சமமான நிலையில் தமிழ் நாட்டிலுள்ள மேற் குறிப்பிட்டுள்ள நிறுவனங்கள் போட்டியிட இந்த மாற்றம் வகை செய்யும்.

**71.** பாலிதீன் (Polythene), பாலிபுரோபிலின் (Polypropylene), பாலிவினைல் குளோரைடு ஆகிய வற்றிலிருந்து செய்யப்படும் டப்பாக்கள் (Cans and blow moulded Containers including closures), சுருள்கள் (Films, sheets), குழாய்கள் (Lay flat tubes) ஆகியவற்றின் மீதான ஒருமுனை வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீத மாகக் குறைக்கப்படுகிறது.

**72.** ரப்பருடன் சேர்க்கப்பட்ட தென்னை நார் (Rubberised coir) மீதான விற்பனை வரி அண்டை மாநிலங்களில் விதிக்கப் படுவதைவிட அதிகமாக இருப்பதால், இதனை 4 சதவீதத்திலிருந்து 2 சதவீத மாகக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**73**. *15,000க்குக் குறைந்த விற்பனையுள்ள பத்திரிகைகளுக்குத் தேவையான பத்திரிகைக் காகிதம் மீது விதிக்கப்படும் 8 சதவீத வரி 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.*

**74**. *வணிகப் பெயர் இல்லாமல் அல்லது வணிக, வாணிப-குறிகள் 1958-ம் ஆண்டு சட்டத்தின்கீழ் (*Trade and Merchandise Marks Act*) வணிகக் குறி பதிவு செய்யப்படாமல் விற்பனை செய்யப்படும் அப்பளம், சேமியா, ரொட்டி வகைகள் (*Bakery products*) ஆகிய உணவுப் பொருள்களுக்குப் பலமுனை விற்பனை வரியிலிருந்து அறவே விலக்களிக்கப்படுகிறது. இந்த விற்பனை வரி மாற்றங்கள் 1-4-1981 முதல் செயலாக்கப்படும். இந்த வரிவிதிப்பு-வரிக் குறைப்பு ஆகிய வரி மாற்றங்களினால் அரசுக்கு நிகரமாக ரூபாய் 20 கோடி வருவாய் கிடைக்குமென மதிப்பிடப்படுகிறது.*

## விவசாயிகளின் கடன்

**75**. *1980—81ஆம் ஆண்டு, அரசு விவசாயிகளுக்கு அளித்த சலுகைகள் விளைவாகத் தக்காவிக் கடன்களில் நிலுவையாக இருந்த ரூ. 21 கோடியும் (முதலில் ரூ. 16 கோடி என்று அறிவிக்கப்பட்டது) சிறு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டி நிலுவையாக இருந்த ரூ. 50 கோடியும் (முன்பு ரூ. 42 கோடி என அறிவிக்கப்பட்டது) ஆக ரூ. 71 கோடிக்குக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. மேலும், சிறு விவசாயிகள் திருப்பிச் செலுத்தியிருந்த ரூ. 23 கோடி அடுத்த ஆண்டுக் கடன் நிலுவைக்கு ஈடு செய்யப்படும் எனவும் அரசு அறிவித்துள்ளது. விவசாயிகளின் கடன் சுமையை மேலும் குறைக்கும் வகையில் கீழ்க்கண்ட சலுகைகளை வழங்க அரசு முடிவு செய்துள்ளது.*

(1) ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலத்தைச் சொந்தமாகவோ குத்தகையாகவோ பயிர் செய்யும் சிறு விவசாயிகள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்று நிலுவையிலிருக்கும் குறுகியகாலப் பயிர்க் கடன்களில் ஏற்கெனவே செலுத்தாமலிருந்து அசலை 1981ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளுக்குள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்தி விட்டால், திருப்பிச் செலுத்துகின்ற தேதி வரையில் கூடுகின்ற சாதாரண வட்டியும், தண்ட வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.

(2) இதர விவசாயிகள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்றுள்ள குறுகிய காலப் பயிர்க் கடன்களை 1981ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாளுக்குள், அது வரையில் செலுத்த வேண்டிய சாதாரண வட்டியுடன் திருப்பிச் செலுத்தி விட்டால் அவர்கள் செலுத்த வேண்டிய தண்ட வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

**76.** சிறு உழவர்கள் வாங்கும் கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவதற்கு ஊக்கமளிக்கும் வகையில், 1981–82ஆம் ஆண்டில் புதிய ஏற்பாடு ஒன்றைச் செயலுக்குக் கொண்டு வருகிறோம். குறுகிய காலக் கடன் தவணைகளையும் நடுத்தர காலக் கடன் தவணைகளையும் உரிய நாளுக்குள் சிறு உழவர்கள் செலுத்தினால், அவர்கள் கொடுக்க வேண்டிய வட்டியில் 2 சதவீதம் கழித்துவிடப்படும்.

## மதுவிலக்கு

**77.** இந்த ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரையில், மன்ற உறுப்பினர்கள் மதுவிலக்குச் கொள்கையைப் பற்றி மனந்திறந்து கருத்துக்களை வெளியிடலாம் என்றும், அதனை எவ்வாறு செம்மைப் படுத்தலாம், திருத்தி அமைக்கலாம், மறுபரிசீலனை

செய்யலாம் என்றும் கேட்கப்பட்டிருந்தன. மன்ற உறுப்பினர்கள் பலரும் தத்தம் கருத்துக்களை வெளியிட்டனர். மதுவிலக்குக் கொள்கையைச் செம்மையாகச் செயற்படுத்த வேண்டும் என்பதில் இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உறுதியாகவே இருந்து வந்ததையும், என்றாலும் சட்ட விரோதமாகக் கள்ளச்சாராயம் காய்ச்சப்பட்டும், கள்ளத்தனமாகக் குடிக்கப்பட்டும் வந்ததையும், அனுமதியின்றி கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும், குடிப்பதையும் கடுமையாகத் தண்டிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டதையும் மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக, ஏழை எளிய குடும்பங்கள் பல இன்னல்களுக்கு உள்ளானதைக் கண்டு, நடைமுறையில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அனுமதிச் சீட்டு பெற்று மதுவகைகள் (liquor) அருந்தும் முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. அதற்குப் பிறகு, மதுவிலக்குச் சட்டம் நடைமுறையில் இருக்கவில்லை என்றும், மதுவிலக்கு நாட்டில் இருக்கிறதா என்றும் அவை உறுப்பினர்கள் சிலர் சுட்டிக்காட்டும் நிலை நீடித்து வருகிறது. இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்துவதோடு, மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறது. மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், சமூக விரோதிகள் சிலரின் கைக்குச் செல்லுகின்ற பணத்தை அரசுக்குக் கிடைக்க வழிவகை செய்ய முடியும் என்று இந்த அரசு கருதுகிறது. எனவே மதுவிலக்குச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கீழ்க் கண்டவாறு செய்ய இந்த அரசு முடிவு செய்திருக்கிறது.

**78.** 25 வயசுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே மது அருந்த அனுமதிக்கப்படுவர். அவர்கள் முறைப்படி அனுமதிச்சீட்டு (permit) பெற வேண்டும். பாட்டில்களில் சாராயம் அடைக்கப்பட்டு உரிய கடைகளில்

விற்பதற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும். கடைகளில் இருந்து குடிக்க யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். கல்வி நிலையங்கள், மருத்துவ நிலையங்கள், அனைத்து மத வழிபாட்டு இடங்கள், மாணவர் விடுதிகள் போன்றவற்றின் அருகில் மதுக் கடைகள் திறக்க அனுமதி அளிக்கப்படமாட்டாது. முறைப்படி உரிமம் பெற்றவர்கள் மட்டுமே மதுவகைகள் விற்க அனுமதிக்கப்படுவார்கள். அனுமதி-உரிமம் இன்றி சாராயம் காய்ச்சுவது, விற்பது, அருந்துவது போன்றவை தொடர்ந்து சட்டப்படி தடுக்கப்பட்டு, மீறுபவர்கள் சட்டப்படித் தண்டனைக்குள்ளாக்கப் படுவார்கள். கள் இறக்குவதற்கு முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட மரமேறுவோர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மட்டுமே அனுமதி அளிக்கப்படுவார்கள். சாராயம், கள் தயாரித்தல், விற்பனை செய்தல் தொடர்பான விதிகள் அடங்கிய திருத்தச் சட்டம் தனியே கொண்டுவரப்படும்.

**79**. குடிப்பதனால் விளையும் தீமைகளைப் பற்றிய பிரச்சாரத்தை அரசு தீவிரமாக மேற்கொள்ளும். திரைப்படங்கள், நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், பாடல்கள் போன்றவற்றின்மூலம் மதுவிலக்கு பற்றிய பிரச்சாரம் செய்வதற்கு முதல் தவணையாக ரூ. 1 கோடி ஒதுக்கப்படும். அரசு மேற்கொள்ளவிருக்கும் இந்த மாற்றங்களின் மூலம் கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், அனுமதியின்றி விற்பனை செய்வோர் கள்ள மது நடமாட்டத்திற்கு உடந்தையாக இருப்போர் ஆகியோரிடமிருந்து பொதுமக்களுக்கு உண்டாகும் இன்னல்கள் விலகும் என்று அரசு எதிர்பார்க்கிறது.

மாண்புமிகு தலைவர் அவர்களே,

**80**. தமிழ்நாட்டின் நிலையையும், தமிழக அரசின் நிதி நிலையையும் மன்றத்திடம் தெளிவுபடுத்தியுள்ளேன். விளக்கங்கள் தந்துள்ளேன்; வேண்டுகோள்கள் விடுத்துள்ளேன். இங்கு எடுத்து **வைக்கப்பட்ட**

கொள்கைகளையும், குறிக்கோள்களையும், திட்டங்களையும் சிறப்பாகவும் செம்மையாகவும் நிறைவேற்றிட மன்ற உறுப்பினர்கள் அனைவரின் உதவியையும், ஒத்துழைப்பையும் நல்குமாறு விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

**81.** வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம் மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும், குறை நீங்குகிற முறையில் எண்ணிச் செயல்படுத்த வேண்டும் என்ற சீரிய கருத்தினை உள்ளடக்கிய தன்மையில்

" பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல். "

என்ற வள்ளுவர் கூறிய வாக்கிற்கிணங்க, செயல் புரிந்திட மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் உறுதுணையான ஆதரவை இந்த அரசிற்கு அளித்திட வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**82.** இந்த நிதி நிலை அறிக்கையை உருவாக்கிட எனக்குச் சிறப்பான உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. கே. ஜே. எம். ஷெட்டி அவர்களுக்கும், அவருடன் இணைந்து நின்று பணியாற்றிய அதிகாரிகளுக்கும், அலுவலாளர்களுக்கும் நான் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**83.** 1981–82ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஏற்குமாறு அவையினரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்.

சென்னை,
1981ஆம் ஆண்டு
மார்ச்சுத் திங்கள் 21ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2012, ரௌத்திரி,
பங்குனித் திங்கள் 8ஆம் நாள்

**இரா. நெடுஞ்செழியன்,**
நிதி அமைச்சர்.

30 APR 1981